மலர் 6
இதழ்: 5
1984 - வைகாசி
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு

# செம்பதாகை

★ பலஸ்தீன மக்களின் தாயகத்தைப் பறித்த ★ உலக மக்களால் நிராகரிக்கப்பட்ட ★ மனித வதைக்குப் பெயர்பெற்ற

# இஸ்ரேலியப் பயங்கரவாதிகளை உடனே வெளியேற்று!

இலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு எந்தப் பேயுடனும் கூட்டுச்சேரத் தயாராக உள்ளோம் என்ற கூற்றின் அடிப்படையிலேயே சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலியர்கள் இங்கு வரவழைக்கப் பட்டுள்ளனர். 'மனிதர்கள் பேய்களாகலாம்'. ஆனால் ஒருபோதும் 'பேய்கள் மனிதர்கள் ஆவதில்லை'. நமது நாடு பேய்களின் வனமாக ஒருபோதும் மாறக்கூடாது என்பதே நமது நாட்டு மக்கள் அனைவரினதும் விருப்பமாகும்.

இஸ்ரேல் என்றநாடு உருவாக்கப்பட்டதற்கும், அதை உருவாக்கிய சியோனிசப் பயங்கரவாதிகளுக்கும் உலகில் ஒரு கறைபடிந்த வரலாறு உண்டு. பலஸ்தீன மக்களை அவர்களின் சொந்தப்பூமியில் இருந்து கொலை, நீணைப்பு, கற்பழிப்பு, சித்திரவதை, போன்றவற்றின் மூலம் துரத்தியடித்து விட்டே அவர்களது தாயகத்தை அபகரித்து இஸ்ரேல் நாட்டை உருவாக்கிக்கொண்டார்கள். அன்டை அரபு நாடுகளில் அகதி முகாம்களில் இன்றும் பல லட்சம் பலஸ்தீன மக்கள் சொந்த நாட்டை இழந்தநிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த நிலையிலும் கூட இந்தச் சியோனிச இஸ்ரேல் பயங்கரவாதிகள் பலஸ்தீன மக்களுக்கெதிராகக் கொடுமைகளையே இழைத்து வருகிறார்கள். அவர்கள் தஞ்சமடைந்த அரபு நாடுகளின் பிரதேசங்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது யூதர்களை ஒழிப்பதில் மிக அநாகரீகச் சித்திரவதைகளைக் கடைப்பிடித்த ஹிட்லர் அழிந்தான். இன்று யூதர்களில் ஒரு பகுதியினரான சியோனிச இஸ்ரேல் பயங்கரவாதிகள் பலஸ்தீன மக்களை மிகவும் கொடூரமான மிருகத்தனச் சித்திரவதைகள் மூலம் கொன்று குவித்து வருகிறார்கள். இஸ்ரேலியர்கள் ஒரு நாடு - அரசு என்ற அடிப்படையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரவணைப்புடன் பலஸ்தீன அரபு மக்களுக்கு எதிரான திட்டமிட்ட தொடர்ச்சியான கொலைவாதகச் செயலைச் செய்து வருகிறார்கள். இதற்கு அவர்களது 'மொசாட்' உளவுப் படை மிகப் பெயர் பெற்ற அமைப்பாகும். இந்த "மொசாட்" படையிடம் எப்படி இன அழிப்புச் செய்யலாம், எவ்வாறு சித்திரவதைகள் செய்து கொலைகளை நடத்தலாம் எவ்வாறு மிருகவெறி கொண்டு மக்களை அடக்கி ஒடுக்கலாம் என்பனவற்றுக்கான பயிற்சிகளை மட்டுமே பெறமுடியும். புத்தபெருமானின் போதனைகளின்படி ஆட்சி செய்வதாகக் கூறி வரும் ஒரு அரசாங்கத்திற்கு இஸ்ரேலியப் பயங்கரவாதிகளின் பயிற்சி எதற்கு என்றே மக்கள் வினவுகிறார்கள்.

இலங்கையில் கூறப்படும் பயங்கரவாதம் இனப்பிரச்சினையில் இருந்து உருவாகியதே. இனப்பிரச்சனையின் தீர்வுக்கு அரசியல் தீர்வே சரியானதாகும், ஆனால் அரசியல் தீர்வை விரைவுபடுத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் ராணுவத் தீர்வையே துரிதப் படுத்துகிறது. அதில் ஒன்றே இஸ்ரேலியர்கள் வரவழைக்கப்பட்டமையாகும்.

இன்று இனப்பிரச்சினைக்கு இஸ்ரேலியக் கொலைகாரர்கள் கூப்பிடப்பட்டுள்ளனர். நாளை அந்நியக் கம்பனிகளின் பாதுகாப்புக்கு நேரடியான அமெரிக்கப்படைகளும் வேறு நாடுகளின் படைகளும் வரவழைக்கப்படும். மறுபுறத்தில் இந்தியப் படைகள் நாட்டுக்குள் புகும் அபாயம் உருவாகும். அத்துடன் இந்தியாவைப் பாதுகாக்க அதன் கூட்டாளியான சோவியத் படைகளும் வரலாம். இறுதியில் இலங்கை அந்நியப் படைகளின் வேட்டைக்காடாகவே மாற்றப் படும். அப்பொழுது இந்த நாட்டின் தேசிய சுதந்திரம், இறைமை என்ன கதிக்கு உட்படும்.

தேசிய சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் உயிர் விடுவதாகக் கூறும் அரசாங்கத் தலைவர்களே அவற்றுக்கு உலைவைக்கும் நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கின்றனர். இந்த அபாயகரமான நிலையில் இருந்து நாட்டைப் பாதுகாப்பது நாட்டுமக்கள் அனைவரினதும் கடமையாகும். இஸ்ரேல் பயங்கரவாதிகள் இங்கு வரவழைக்கப்படுவது வெறுமனே முஸ்லீம் மக்களுடைய பிரச்சினை மட்டுமல்ல. அல்லது பலஸ்தீன மக்களுக்கான அனுதாபப் பிரச்சினை மட்டுமல்ல. இந்நாட்டின் இனப் பிரச்சினையைக் கையாளும் மிக மோசமான வழிமுறையும், முழு நாட்டின் தேசிய சுதந்திரம், இறைமை என்பனவற்றைச் சர்வதேசப் பயங்கரவாதிகளின் கைகளில் ஒப்படைக்கும் நேரடி நடவடிக்கையுமாகும்.

எமது நாட்டின் சொந்தப் பிரச்சினைகள் எதற்கும் அந்நியத் தலையீட்டை யாருமே நாடுவது எதிர்க்கப்படல் வேண்டும். இனப்பிரச்சனையுடன் எழுந்துள்ள பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறப்படுவதற்கு எதிராக உலக மக்களின் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும்உள்ளான, மனித குலவிரோதிகளான இஸ்ரேலியப் பயங்கரவாதிகளை நாட்டுக்குள் ஆசாங்கம் அழைப்பதைச் சகல மக்களும் கண்டித்து எதிர்க்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை துரிதப்படுத்தி ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்த வேண்டுமேயன்றி ராணுவத் தீர்வை நாடி இஸ்ரேலியர்களை வரவழைப்பது முழு நாட்டிற்குமே நாசத்தைக் கொண்டு வரும் செயலாகும்.

ஆதலால் நாட்டின் சிங்கள—தமிழ்—முஸ்லீம் மக்கள் அனைவரும் இஸ்ரேலியப் பயங்கரவாதிகளை வெளியேற்றும் இயக்கத்தை உறுதியாக முன்னெடுக்க வேண்டும்.

★

## தொழிலாளருக்கு சம்பள உயர்வு மறுப்பு

# ஜனாதிபதிக்கு 10,000 உயர்வு

1980ம் ஆண்டு முன்னூறு ரூபா சம்பள உயர்வு கேட்டு பல்லாயிரம் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையிலேயே அன்று அச்சம்பள உயர்வு முன்வைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் கிடைத்த பரிசு யூ. என். பி குண்டர்களின் திட்டமிட்ட பயங்கரத் தாக்குதல்கள் தான். அத் தாக்குதல்களின் போதே சோமபாலா என்ற ஊழியர் கொல்லப்பட்டார். சம்பள உயர்வு கேட்ட வேலை நிறுத்தம் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தால் அடக்கப்பட்டது. வேலைநிறுத்தம் செய்தவர்கள் வேலை நீக்கப்பட்டனர். மீண்டும் வேலை கிடைக்காமையால் பத்துப் பேருக்கு மேல் தற்கொலை செய்துகொண்டனர். இன்றும் வேலை திரும்பக் கொடுபடாத ஊழியர்கள் தொழிலாளர்கள் பலர் வீதிகளில் அலைய விடப்பட்டுள்ளனர்.

அன்றைய வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு முன்னூறு ரூபா சம்பள உயர்வு கேட்கப்பட்டது. இன்று கேட்பதாயின் அதில் மூன்று மடங்கு கேட்கவேண்டும். ஏனெனில் அந்தளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்து விட்டன. ஆனால் சம்பள உயர்வு என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்ற விதமாக ஆட்சியினர் கூறி வருகின்றனர்.

அண்மையில் தோட்டத் தொழிலாளர்கள் சில சில்லறை ரூபாக்களைச் சம்பள உயர்வாகப் பெறுவதற்குப் பத்து நாள் வேலைநிறுத்தப் போராட்டம் செய்தனர். அவர்கள் கேட்ட சம்பள உயர்வுக்குப் பதில் பிச்சைக் காசே வீசப்பட்டுள்ளது. உண்மையான சம்பள உயர்வு தட்டிக்கழிக்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வைத் தயாரத்தின கமிட்டி சிபார்சு செய்துள்ளது. அது கூட மிகக் குறைந்த சம்பள உயர்வுக்கான சிபார்சு மட்டுமே. அதைக் கொடுப்பதற்கு 55 கோடிக்குமேல் வேண்டும் என்று அமைச்சர் கைவிரிக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்பு தோட்டத் துரைமார்களுக்கு சம்பள உயர்வு சந்தோஷமாக வழங்கப்பட்டது. பொலீஸ் மா அதிபருக்கும் உயர்தர பொலீஸ் அதிகாரிகளுக்கான சம்பளங்கள் அதிகரித்த அளவில் மாற்றி அமைப்பதற்கான சிபார்சுகள்

(8ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலிய வெறியர்களின் வரவுக்கு

# கம்யூ. கட்சி (இடது) கண்டனம்!

## தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அறிக்கை

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை இயங்க அனுமதித்ததன் மூலம் இந்நாட்டின் தேசிய சுதந்திரத்திற்கு நேரடி ஆபத்தையும், தேசிய கௌரவத்திற்குப் பெரும் அபகீர்த்தியையும் இந்த அரசாங்கம் தேடிக்கொண்டுள்ளது. இச்செயலை நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலில் எதிர்த்து முறியடிக்க முன்வரல் வேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக்கமிட்டியின் சார்பில் அதன் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், நமது நாட்டின் தேசிய சுதந்திரத்திற்கும், தேசிய கௌரவத்திற்கும் மோசமான பாதிப்புகள் தேசிய சர்வதேசிய ரீதியில் ஏற்படக்கூடிய நடைமுறைகளை ஏற்கனவே இந்த அரசாங்கம் செய்து வந்துள்ளது. இப்பொழுது சர்வதேச சமூகத்தின் கடும் வெறுப்புக்குள்ளானவர்களும், மனித வதைக்குப் பெயர் பெற்ற சியோனிசப் பயங்கர

8ம் பக்கம் பார்க்க

# சர்வகட்சி மாநாடு ஒரு உலக சாதனை

இலங்கையில் நடைபெற்றுவரும் சர்வ கட்சி மாநாடு ஆரம்பத்தில் இனப் பிரச்சினையின் தீர்வுக்கானது என்றே கூறப் பட்டது. அப்போது நாட்டையும், மக்களையும் நேசிக்கக் கூடிய சகலரும் குறைந்தபட்சமாவது இம் மாநாடு இனப் பிரச்சினையின் தீர்வினை நோக்கி நகரும் என்றே எதிர்பார்த்தனர். அம் மாநாடு வெற்றிபெற வேண்டும் எனவிரும்பினர். ஆனால் சர்வகட்சி மாநாடு வெறும் ஒத்திவைப்பு மாநாடாக இழுபட்டுச் செல்கிறது.

கடந்த வருடம் யூலை வன்செயல் நடத்திய கொடுமைகளும் அழிவுகளும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கென சர்வகட்சி மாநாட்டை கூட்ட வைத்த சம்பவமாகும். அதன் ஒருவருடப் பூர்த்தி அடுத்த மாதம் நிறைவுறப் போகிறது. இந்த ஒருவருட காலத்தில் சர்வகட்சி மாநாடு சில மணி நேரங்களே நடத்தப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் சில நிமிடங்களில் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. இன்று மாநாடு மீது அதிக மக்களுக்கு நம்பிக்கை அற்றுப்போய்விட்டது இது ஒரு வேடிக்கைகாட்டு என்று மக்கள் மிகவும் லேசாகவே கூறும் நிலையை சர்வகட்சி மாநாடு தோற்றுவித்துள்ளது.

உண்மையில் மாநாட்டின் ஆக்கபூர்வ நடவடிக்கைகளைச் செய்யவேண்டிய அரசாங்கமே மாநாட்டை முன்னின்று ஒத்திவைத்து காலம் கடத்துகிறது. தற்போது அரசியல் கட்சிகளின் கைகளில் இருந்து மாநாட்டின் நடவடிக்கைகள் நிபுணர்களின் கைகளுக்கு மாறி உள்ளது. அடுத்து யாருடைய கைகளுக்கு மாறுமோ தெரியாது. மாநாட்டின் இழுத்தடிப்பு மாநாடுகளில் உலக சாதனையை நிலைநாட்டும் முயற்சியோ தெரியவில்லை.

★

# தமிழ்த் தலைவர்கள் அன்றும் இன்றும்

தலையிடி தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பார்கள். இஸ்ரேல் பற்றிய தலையிடி இப்பொழுது தான் தமிழ்த் தலைவர்களுக்கு இடிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தத் தமிழ்த் தலைவர்களுக்கு இது மட்டுமல்ல எல்லாமே காலம் கடந்த ஞானோதயம்தான்.

இஸ்ரேலின் தோற்றம், அதன் நோக்கம், நடைமுறையில் பலஸ்தீன, அரபு மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளைப் பற்றி எல்லாம் உலகம்பூராகவும் எடுத்துக் கூறப்பட்ட வேளையில் தமிழ்த் தலைவர்கள் இஸ்ரேல் புகழ் பாடிப் பரப்பி வந்தனர். இஸ்ரேலிய சியோனிச வாதிகளின் மனிதவதைகளை வீரதீரச் செயல் என்றும் போற்றி வந்தனர். 25 லட்சம் இஸ்ரேலியர்கள் தமது முயற்சியால் இஸ்ரேலை உருவாக்கி, தமது வீரதீரத்தால் எப்படி உலகப் புகழுடன் வாழுகிறார்கள் பாருங்கள். இப்படி ஏன் தமிழர்களாகிய நாம் வாழக் கூடாது என முன்னுதாரணம் காட்டி இஸ்ரேல் புகழ் பாடிய தமிழ்த்தலைவர்கள் இன்று விழி பிதுங்க முழிக்கிறார்கள்.

சித்திரவதைக்கும், கொலைக்கும் பெயர் பெற்ற 'மொசாட்' பற்றிப் புகழ்ந்தவர்கள் இன்று அதே 'மொசாட்' நமது நாட்டிற்குள் அதுவும் தமிழ் மக்கள் மத்திக்கு- சித்திரவதைகளின் பயிற்சிக்கு என கொண்டுவரப்பட்ட போது தான் கண் விழித்திருக்கிறார்கள்.

பரிதாபத்துக்குரிய தமிழ்த் தலைவர்களின் தீர்க்கதரிசன மற்ற அரசியல்நிலைப்பாட்டை என்னவென்று கூறுவது. அவர்கள் எப்பொழுதும் பிற்போக்குத் தனங்களுக்கு வக்காலத்து வாங்குவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் தானே. அவர்களின் குருட்டுத்தனமான கொள்கைகளும் பிற்போக்கான நிலைப்பாடுகளும் அவர்களுக்கே எதிரிகளாகி விடுகின்றன,

இன்று இஸ்ரேல் பற்றியும் அதன் 'மொசாட்' உளவுப்படை பற்றியும் தெரிந்து கொண்ட அளவு அன்று தெரிந்து கொண்டு தேசத்தினதும் உலக மக்களினதும் முற்போக்கு எண்ணங்களுடன் இணைந்து சென்றிருக்கலாம் அல்லவா? இன்று கூடத் தமிழ்தலைவர்களில் சிலருக்கு அமெரிக்காவையும் அதன் செல்லப்பிள்ளையான இஸ்ரவேலையும் எதிர்க்க மனம் ஒப்பவில்லைத்தான். என்ன செய்வது தொடர்ந்தும் ஏமாற்றக்கூடிய வசதி வாய்ப்புகள் குறைவாகவே இருக்கிறது. அதனால் ஒருவாறு சமாளிக்கிறார்கள்,

★

விற்பனையாகிறது
பேராசிரியர் சிவசேகரத்தின்
நதிக்கரை மூங்கில்
(கவிதைத் தொகுதி)
★ ★
"தாயகம்" 7வது இதழ்
★ ★
அண்மைக்கால சீன வெளியீடுகள்
தொடர்பு கொள்ளுங்கள்
வசந்தம் புத்தக நிலையம்
374 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமரனி

# ஜனாதிபதியின் மந்திரவார்த்தைகள்

பேய் பிசாசுகளைக் கலைக்கும் வல்லமை பெற்றவர்கள் எனக் கூறிக்கொள்ளும் மந்திரவாதிகள் சில குறிப்பிட்ட வார்த்தைப் பிரயோகங்களை அடிக்கடி உச்சரித்துக் கொள்வர். அந்த உச்சரிப்புகளுக்கு இருக்கும் மந்திரசக்திதான் பேய்களை விரட்டியடிக்கின்றது எனச் சிலர் நம்பியும் விடுவர். உண்மையில் நடைபெறுவது சிலரது அறியாமையை, மூட நம்பிக்கையைப் பயன்படுத்தி மந்திரவாதிகள் என்போர் ஏமாற்றிப் பிழைப்பு நடத்துவது தான். இதுபோன்றே தற்போதைய ஆட்சி பீடத்தின் தலைவர்களும் நடந்து கொள்கின்றனர்.

இந்த ஆட்சி பதவிக்கு வந்தது முதல் ஜனநாயகம், தார்மீகம், சுதந்திரம், தேர்தல், வாக்குரிமை, மனித உரிமை, அன்பு, கருணை என்ற மந்திரவார்த்தைகளைத் தாராளமாக உச்சாடனம் செய்து வந்துள்ளது. ஆனால் ஆட்சியின் நடைமுறைகளுக்கும் இவ்வார்த்தைகளுக்கும் எவ்விதத்தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வார்த்தைப் பிரயோகங்களுக்குரிய அர்த்தங்கள் ஏதாவது பயன்படுமானால் அவை முற்று முழுதாக ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுக்கும் அவர்களைச் சுற்றி உள்ள ஒரு சிறு கூட்டத்தினருக்கு மட்டுமே யாகும். ஏனைய மக்களைப் பொறுத்தவரை மந்திரவாதிகளால் ஏமாற்றப்பட்டவர்களைப் போன்ற நிலைதான்.

இந் நாட்டிற்கு முதலாளித்துவம் தேவை இல்லை, கம்யூனிசமும் தேவை இல்லை. புத்தமத அடிப்படையில் அமைந்த ஜனநாயக தார்மீகமே தேவையானது என்றும், தான் அந்த அடிப்படையிலேயே ஆட்சி செய்து வருவதாகவும் ஜனாதிபதி ஜே. ஆர். கூறி உள்ளார்.

ஜனாதிபதியின் இக் கூற்று சிந்திக்கத்தெரிந்த எவரையும் ஏமாற்றிவிடாது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஐம்பது ஆண்டுகளுக்குமேல் நேரடிப் பங்கினை வகித்து வந்த ஜே. ஆரின் நிலைப்பாடு எத்தகையது என்பது தெட்டத்தெளிவானது: அரசியல் விவகாரங்களில் அதிக அக்கறையும் சிந்தனை வளர்ச்சியும் ஏற்பட்டுள்ள இன்றைய கட்டத்தில் நான் முதலாளித்துவத்தை நிலை நிறுத்தவே நிற்கிறேன் என்று ஜே. ஆர் கூறினால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதே போல் நான் இப்பொழுது முழுக்க முழுக்க சோஷலிச வாதியாகி விட்டேன் என்று ஜே. ஆர் கூறினாலும் மக்கள் நம்பப்போவதில்லை. எனவே ஜே. ஆருக்கு உள்ள ஒரே உபாயம் யாதெனில் முதலாளித்துவமும் இல்லாத, கம்யூனிசமும் இல்லாத புத்தமத அடிப்படையைக் கொண்ட ஜனநாயக தார்மீக வாதத்தைக் கடைப்பிடிக்கின்றேன் என்று கூறி மக்களின் கண்களில் மண்ணைத் தூவுவதைத் தவிர வேறுவழி இல்லை. புத்தரின் போதனைப்படி கடுகளவாவது இன்றைய ஆட்சியினர் நடந்திருந்தால் இந்நாடு இவ்வளவு இழிநிலைக்கு சென்றிருக்கமாட்டாது. இன்று மட்டுமல்ல என்றுமே இத்தகைய தலைவர்கள் புத்த மத அடிப்படையில் ஆட்சி செய்ய மாட்டார்கள். ஏனெனில் மக்களின் மத உணர்வுகளை தமது அரசியல் லாபத்திற்கு பயன்படுத்தமட்டுமே தாங்கள் புத்தரின் வாரிசுகள் என்று கூறுகிறார்களே தவிர நடைமுறையானது முதலாளித்துவ சொத்துடைய சுக போக வாழ்க்கையை நிலை நிறுத்துவதாகவே உள்ளது.

ஆதலால் ஜனாதிபதி எத்தனை விதமான மந்திரவார்த்தைகளை உச்சரித்தபோதிலும் திட்டவட்டமான பெருமுதலாளித்துவ சக்திகளினதும், வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளினதும் நம்பிக்கைக்குரிய ஆட்சித் தலைவராகவே இருந்து வருகிறார். இவரது வார்த்தைகளில் இந்நாட்டுச் சாதாரண உழைப்பாளி மக்கள் மதியிழந்து ஏமாற மாட்டார்கள். மக்கள் தற்போது ஏமாற்றும் மந்திரவாதியின் நடவடிக்கைகளை மிக அவதானமாகக் கவனிப்பது போன்றே கவனித்துவருகிறார்கள். மக்களின் முடிவு ஏமாற்றிய மந்திரவாதிக்கு கிடைக்கும் தீர்ப்புப் போன்றதாகவே அமையும்.

★

# கடத்தலும் கருணையும்

சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தம்பதிகள் கடத்திப் பணயம் வைக்கப்பட்டதும், பின் இந்திராவினதும் எம். ஜீ. ஆரினதும் வேண்டுகோளை ஏற்று விடுவிக்கப்பட்டதும் யாவரும் அறிந்த ஒன்றே. இந்தக்கடத்தலின் நோக்கம் சர்வதேசப் பிரபல்யம் தேடுவது என்றே கூறப்பட்டது. எது எப்படியாயினும் இவ்வித நடவடிக்கைகள் மூலம் அவர்கள் கூறும் விடுதலை இலட்சியத்தை அடையவோ அல்லது அந்தப் பாதையைச் செப்பனிடவோ முடியுமா? முடியாது என்பதைத் தவிர வேறு பதிலைக் கூறமுடியாது.

உண்மையான நீதியான மக்கள் போராட்டங்களுக்கு எத்தகைய குறுக்கு வழியும இருக்கமுடியாது. இவ் வழிகள் சிலவேளை வீரதீரம் போலக் காட்சி கொடுக்கலாம் நீண்டகால நோக்கில் இவை எதிரிகளின் கையைப் பலப்படுத்தவே உதவுவனவாகும். உதாரணத்திற்கு பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சில குழுக்கள் இவ்விதமான கடத்தல்களைச் செய்து பணயம் வைத்த சம்பவங்கள் உலகப் பிரசித்தம்

(3ம் பக்கம் பார்க்க)

# பிரதமரின் போர்முரசு உள்வீட்டுப்பூசலா?

பிரதமர் பிரேமதாசா மீண்டும் மீண்டும் போர் முரசு ஒலிக்கிறார். ஏன் இந்த ஆவேசம் என்று அரசாங்கத்தினுள் உள்ளவர்களே வினவுகிறார்கள். பிரதமரின் பேச்சை மறுப்பது போல் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் பேசுகிறார். பயங்கரவாதம், இந்தியா என்று மிகப் பெரும் குரல்வைத்துப் பேசுவது ஒருபுறத்தில் மக்களின் சகல கவனத்தையும் திசை திருப்பி அதன் மறைவில் ஆட்சியைத் தொடர்வதற்கேயாம். அதே வேளை யார் சிங்கள மக்கள் மத்தியில் வீரப்பதக்கத்தைப் பெறுவது என்ற போட்டியும் ஆட்சியில் உள்ளவர்கள் மத்தியில் இடம் பெறுகின்றது போலும். ஏற்கனவே யூ. என். பிக்குள் மூன்று நான்கு கோஷ்டிகள் ஒன்றை ஒன்று கழுத்தறுக்கத் தயாராகிக் கொண்டுள்ளன. எல்லாவற்றுக்கும் ஜே. ஆர். ஒரு மெல்லிய ஒட்டை மட்டுமே போட்டு வைத்துள்ளார். அதனாலேயே ஜே ஆர். நாட்டில் இல்லாத சமயத்தில் அவருக்கு அடுத்தவர் நான் தான் என்ற தோரணையில் பிரதமர் போர்ப்பறை கொட்டினார். மறுநாள் நிதானமாகப் பேசும்படி ஆலோசனை கூறி பந்தோபஸ்து அமைச்சர் தனது முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவது போலப் பேசியிருந்தார். இந்த இருவரினதும் மாறுபட்ட பேச்சுகளை மக்கள் புரிந்து இவர்களது உள்வீட்டு விஷம் வெளியில் வருவதைத் தடுக்கும் முயற்சியாக ராஜாங்க அமைச்சர் பிரதமரின் பேச்சையும் பந்தோபஸ்து அமைச்சரின் பேச்சுக்களையும் பூசி மெழுகிச் சமாளித்தார்.

இவை எல்லாவற்றையும் போர்த்தி மூடும் விதத்தில் ஜனாதிபதி நாடு திரும்பியதும் எல்லோரையும் ஒரேமேடையில் வைத்து மொரட்டுவவில் பகிரங்க கூட்டம் நடத்தி தம்முள் எவ்வித பிளவோ வித்தியாசமோ இல்லை எனக்காட்டி உள்ளனர். ஏமாற்றுபவர்கள் நீண்டகாலம் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள். என்றோ ஒருநாள் உட்பூசல் வெடித்தே தீரும்.

★

## யூ. என். பி. ஆட்சியில்

# முஸ்லீம் மக்களின் நிலை

இந்நாட்டின் சிறுபான்மையினரில் ஒரு பிரிவினரான முஸ்லீம் மக்களின் அதிருப்திக் குரல்கள் அண்மைக் காலங்களில் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. பல வாக்குறுதிகளின் மத்தியில் இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முஸ்லீம் மக்கள் தமது ஆதரவை வழங்கினர். ஆனால் இன்றுவரை அந்த மக்களுக்கு கிடைத்தவை வெறும் ஏமாற்றங்கள் மட்டுமே.

நமது நாட்டில் முஸ்லீம் மக்களின் மொத்த எண்ணிக்கை சுமார் பன்னிரண்டு லட்சத்திற்கு மேலாகும். இவர்கள் மொத்த சனத்தொகையில் எட்டு சத விகிதத்தைக் கொண்டுள்ளனர். வடமாகாணத்தில் அரைலட்சத்திற்கு சற்று அதிகமாகவும், கிழக்கு மாகாணத்தில் மூன்றேகால் லட்சத்திற்கு மேலாகவும், ஏனைய ஏழு மாகாணங்களில் மொத்தம் எட்டு லட்சத்திற்குக் கூடுதலாகவும் வாழ்ந்து வருகின்றனர். நாடு பூராவிலும் செறிந்தும், பரந்தும் வாழ்ந்து வரும் முஸ்லீம் மக்களின் தாய் மொழி தமிழ் மொழியாகவே உள்ளது. இருந்தாலும் அவர்கள் இஸ்லாமிய மதக் கோட்பாட்டாலும், அதையொட்டிய கலாச்சார வாழ்வாலும் ஒன்று பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கு இந்நாட்டின் நீண்ட கால வரலாற்றில் ஒரு தனித்துவமான பாரம்பரியம் உண்டு என்

இலங்கை அரசியலில் முஸ்லீம் தலைவர்கள் எனப்படுபவர்கள் பெரிய அரசியல் கட்சிகளுக்குப் பக்கபலமாகக் காலத்திற்கு காலம் நின்று ஆட்சிகளை அமைக்க உதவி வந்துள்ளார்கள். ஆதன் மூலம் அத்தலைவர்களும் அவர்களைச் சார்ந்த ஒரு குறிப்பிட்ட பகுதியினரும் வாய்ப்பு வசதிகளைப் பெறுபவர்களாக இருந்து வந்துள்ளனர். வர்க்க அடிப்படையில் முஸ்லீம் மக்கள் மத்தியில் உள்ள மிகப் பெரிய முதலாளிகளும், வியாபாரிகளும், யூ. என். பியுடனேயே இருந்து வந்துள்ளனர், அடுத்ததரத்தில் உள்ள முதலாளிகளும், வியாபாரிகளும், தேசிய முதலாளித்துவக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் நின்று செயல்பட்டு வந்துள்ளனர். 1977ம் ஆண்டு தேர்தலில் யூ. என். பியும் அதனைச் சார்ந்த முஸ்லீம் தலைவர்களும் முஸ்லீம் மக்களுக்கு அதிக வாக்குறுதிகளையும், நம்பிக்கைகளையும் கொடுத்து அதிக ஆசனங்களைப் பெற்றதுடன் பல யூ. என். பி ஆசனங்கள் கிடைப்பதற்கும் வழிவகுத்தார்கள்.

இப்பொழுது ஆளும் கட்சியின் சார்பாக பாராளுமன்றத்தில் மொத்தம் பதினொரு முஸ்லீம் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அதேவேளை எதிர்க் கட்சியில் ஒரே ஒரு முஸ்லீம் உறுப்பினர் மட்டுமே உள்ளனர். இந்தப் பதினொரு உறுப்பினர்களில் மூவர் அமைச்சர்கள், நான்கு பேர் பிரதி அமைச்சர்கள், இரண்டு பேர் மாவட்ட அமைச்சர்

காணி வழங்கல், இடங்களைச் சுவீகரித்தல் என்பன போன்றவற்றால் தமிழ் மக்களைப்போல் முஸ்லீம் மக்களும் சிறுபான்மையினர் என்ற அடிப்படை

**நமது நிருபர்**

யில் புறக்கணிக்கப்பட்டு பாதிப்படையவே செய்கிறார்கள்.

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் மிகக் குறைந்த விகிதத்தினரே சேர்க்கப்படுகிறார்கள். அதனாலேயே முஸ்லீம் மக்களுக்கு கல்வி வேலைவாய்ப்

கப்பட்ட வழிகளாகவே முஸ்லீம் மக்கள் காண்கின்றனர்.

யூ. என். பியின் பொருளாதார அரசியல் கொள்கைகளால் பெருமுதலாளிகளும், பெரும் வியாபாரிகளுமான ஒரு குறிப்பிட்ட தொகையான முஸ்லீம்கள் நன்மை அடைந்திருப்பது மறுக்கமுடியாது. மாணிக்கக்கல் முதலாளிகளும், வியாபாரிகளும் கோடீஸ்வரராகி இருக்கிறார்கள். அதேபோல் போக்குவரத்து அமைச்சரின் மகன் போன்ற தனியார் பஸ் முதலாளிகளின் பணப்பைகள் பெருமளவு நிரம்பியுள்ளன உண்மைதான். புறக்கோட்

லீம் சாதாரண மக்கள் நிவாரணம் பெறமுடியவில்லை. அவர்களது நிலை பரிதாபத்திற்குரியதொன்றாகும். இப்பொழுது வெள்ள அழிவுகள் மேலும் கிழக்கு மாகாண முஸ்லீம் மக்களை பாதித்துச் சென்றுள்ளது.

முஸ்லீம் அமைப்புகள் நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் செயற்பட்ட போதிலும் முழு முஸ்லீம் மக்களினதும் அடிப்படை அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமுடியாது. பெருமுதலாளிகளின், பெரும் வியாபாரிகளினதும் நலன்களை

## பெரும் முதலாளிகள் மேலும் உயர்ந்தனர்

## நடுத்தர வர்க்கத்தினர் கீழே தள்ளப்பட்டனர்

## சாதாரண மக்கள் அமுக்கப்பட்டுள்ளனர்

பில் எட்டு சதவிகிதம் ஒதுக்கப்படல் வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளது. மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு கிடைத்திராவிட்டால் இக் குரலின் வலிமை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். இருந்தாலும் கிராமிய, பின்தங்கிய பிரதேச முஸ்லீம் மக்களிடையே வேலையின்மை பெரும் பிரச்சினையாக வளர்ந்து வருகின்றது. இதுவரை காலமும் முஸ்லீம் மக்களில் ஒருபகுதியினரால் செய்யப்பட்டு வந்த சிறு தொழில், சிறு, நடுத்தர வியா

டை வியாபாரத்தில் ஈடுபட்ட மிகப் பெரிய முதலாளிகள் இந்த ஆட்சியில் அபரீதலாபம் அடைந்தது யாரும் மறுக்க முடியாது. அதேபோல் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பைப் பெற்ற ஒருசில முஸ்லீம்கள் ஓரளவு ஒப்பிடும்வகையில் நல்லாக இருக்கலாம். ஆனால் லட்சக்கணக்கான சாதாரண முஸ்லீம் மக்களின் வாழ்க்கை நிலை இந்த அரசின்கீழ் நிச்சயம் சிறப்படையவில்லை. மேலும் மோசமாகி விட்டது என்றே கூறமுடியும்.

முஸ்லீம்கள் என்ற பெயரில் பாதுகாக்கும் அமைப்புகளை விட, முற்போக்கு அரசியல் சிந்தனைகளைக் கொண்ட சாதாரண முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் உறுதியான அமைப்பை முஸ்லீம் மக்கள் மத்தியில் கட்டி வளர்ப்பது முற்போக்கானதாகவும், காலத்தின் தேவையாகவும் இருக்க முடியும். ஏனெனில் முழு முஸ்லீம் மக்களில் சாதாரண மக்களின் தொகையே ஏகப் பெரும்பான்மை கொண்டதாகும். யூ. என். பி. இந்நாட்டு

யதை எவரும் மறுக்கமுடியாது.

இத்தகைய சிறுபான்மைப் பிரிவினரான முஸ்லீம் மக்களின் இன்றைய நிலை எந்த வகையிலும் பெரும் முன்னேற்றத்தைக் கண்டதாகக் காணமுடியவில்லை. முஸ்லீம் மக்களின் ஒரு பகுதியினர் பெரும் வியாபாரிகளாகவும், நடுத்தர-சிறு வியாபாரிகளாகவும் உள்ளனர்; அதே வேளை பல்வேறு படிகளை உடைய விவசாயிகளாகவும், நிலமற்ற மக்களாகவும் உள்ளனர். அவர்களின் கல்வித்தரம் ஏனையவர்களை விடப் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

பேர் மாவட்ட அமைச்சர்களாக உள்ளனர். இவ்வாறு இருந்தும் முஸ்லீம் மக்களின் நிலை ஒருவாறாகவும் மேம்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப் பிரச்சனையில் முஸ்லீம் மக்கள் பெரும் புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் திகவாபி புனித நகர் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான முஸ்லீம் மக்கள் நிலங்களை இழக்கும் அபாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் திகவாபி பிரச்சினை தீர்த்துவைக்கப்படவில்லை. இதே போல் நாட்டின் சகல பகுதிகளிலும் குடியேற்றம்.

தொழில், சிறு, நடுத்தர வியாபாரம் இந்த அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது முஸ்லீம் மக்கள் மத்தியில் அதிகளவு வேலை இன்மையைப் பெருக்கியுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் ஓரளவு கல்வி வாய்ப்பை முஸ்லீம் மக்கள் பெறக் கூடியதாகவும், அன்று வரை இல்லாத சில சலுகைகளையும் அனுபவிக்க கூடியதாக இருந்தது. அதேபோல் வேலைவாய்ப்பிலும் ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பதவிகளிலும் ஓரளவு சலுகைகள் வழங்கப்பட்டன. இன்று அவையாவும் அடைக்

இவைமட்டுமல்ல அன்று புத்தளத்தில் இடம்பெற்ற முஸ்லீம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களை கண்டித்து கண்ணீர் விட்டு அதன்மூலம் பதவிக்கு வந்த இன்றைய ஆட்சியினர், காலியில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான காடைத்தனத்துக்கு துணை போனார்கள். கடந்த யூலை வன்செயலின்போது தமிழ் மக்களுக்கு அடுத்ததாக உயிர்—உடமைகளை முஸ்லீம் மக்களில் ஒரு பகுதியினரும் இழக்க வேண்டியே வந்தது. அதற்கு அரச காடைத்தனமே காரணமாகும். ஏன் கிழக்கு மாகாணத்தில் வீசிய கொடுமையான புயல் அழிவுகளில் இருந்து இன்னும் அப்பகுதி வாழ் முஸ்

கும். யூ. என். பீ. இந்நாட்டு மக்கள் அனைவரையும் ஏமாற்றி தனது வர்க்க நலனை உறுதிப்படுத்தி ஸ்திரமாக்கி வருகிறது. இந்த வேலைக்கு தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியிலுள்ள பெருமுதலாளிகள் ஆதரவாகவே செயல்படுகின்றனர். எதிர்காலத்திலும் அவர்கள் அவ்வாறே வர்க்க நலன் பேணுவார்கள் என்பது உண்மை. ஆதலால் முஸ்லீம் சாதாரண மக்கள் தமது அடிப்படையான அபிலாஷைகளை நாட்டின் சிங்கள-தமிழ் சாதாரண உழைப்பாளி மக்களின் அபிலாஷைகளுடன் ஒன்றிணைந்து முன்செல்ல முயல்வதே சரியான அரசியல் பாதையாகும்.

★

# இந்த அரசாங்கத்தை மக்கள் தண்டிக்கும் காலம் மிக விரைவில் வரும்

## மேதினக் கூட்டத்தில் தோழர் செந்தில்

இந்த அரசாங்கம் அபிவிருத்தி பற்றி எவ்வளவிற்கு வாய்ப்பறைதல் போட்டாலும் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் எவ்வித மேம்பாட்டையும் காணமுடியவில்லை. வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பு, சம்பள உயர்வு வழங்காமையும் பொருளாதாரச் சீர்கேட்டை எடுத்துக் காட்டுகின்றன. பெருமுதலாளிகளுக்கும் பெருவசதிபடைத்தோருக்கும் அந்நிய ஏகபோக கம்பனிகளுக்கும் சேவையாற்றிவரும் ஐ.தே.க. அரசாங்கத்திலிருந்து இந்நாட்டுச் சாதாரண மக்களின் அபிலாஷைகளை ஒருபோதும் நிறைவேற்றிவைக்க முடியாது. ஆதலால் இவ் அரசாங்கத்தை ஆட்சிபீடத்திலிருந்து அகற்ற வேண்டிய தேவை மக்கள் முன்னுள்ள பிரதான கடமையாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யாழ்-காரியாலயத்தில் நடத்திய மேதினக்கூட்டத்தில் உரையாற்றிய தோழர் கே. செந்திவேல் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் (இ-து) மேதினக் கூட்டம் யாழ்-நகர மண்டபத்தில் நடைபெற இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டங்களுக்கு அரசாங்கம் தடைவிதித்ததால் மேற்படி மேதினக்கூட்டம் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்றது.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் தோழர் செந்திவேல் தொடர்ந்து பேசுகையில், யூ.என்.பி அரசின் சகல பொருளாதார அரசியல் கொள்கைகளும் நாட்டு மக்களுக்கு எதிராகவே செயல்படுத்தப்படுகின்றன. மக்களின் கவனம் தம் பக்கம் திரும்புவதைத் தடுப்பதற்கே பயங்கரவாதம் இந்திய ஆபத்து பற்றி உரத்துப் பேசப்படுகிறது. பயங்கரவாதம் என்று கூறப்படுவதால் வரும் ஆபத்தையும், இந்திய ஆக்கிரமிப்புப் பற்றிய அச்சத்தையும் உண்மையாகவே

(8ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்......

பெற்றவை. ஆனால் அவையாவும் ஈற்றில் முறியடிக்கப்பட்டதுடன் பலஸ்தீன மக்களின் நீதியான போராட்டத்தை பயங்கரவாதம் எனக் காட்டுவதற்கு அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் இக்கடத்தல் சம்பவங்கள் உதவின. போராட்டங்களின் திசைகளைத் திருப்பி அவற்றின் வேகத்தை குறைக்கவும், எதிரிகளைப் பலப்படுத்தவுமே கடத்தலும் வன்முறையும் உதவின என்பதை நினைவு கொள்வது அவசியம்.

விடுதலையும் சுதந்திரமும் யாருக்கு? பரந்துபட்ட மக்களுக்காக? அன்றி ஒரு சில குழுவினருக்கா? இதற்கான பதிலை புரிந்து கொண்டால் எந்தப் போராட்டமும் குறுக்கு வழிகளை நாடமுடியாது. பல்வேறு குழுக்களும் ஒருவரை விட மற்றவர் எப்படி அதிக பிரபல்யம் தேடுவது என்பதைப் பற்றி சிந்திப்பதைவிட யதார்த்தமான நமது நாட்டு நிலைமைகளின் அடிப்படையில் சரியான கொள்கையையும், போராட்டத்தையும் எப்படி முன்னெடுப்பது என்பதையிட்டு தீவிரமாகச் சிந்திப்பதே இன்றைய தேவையாகும்.

# "வைதீக மார்க்சிசம்"

**மோஹன்**

வைதிக மாக்ஸியம் என்ற ஒரு சொற்றொடர் வைதிகம் என்றால் என்ன என்பதையோ மாக்ஸியம் என்றால் என்ன என்பதையோ ஆழமாக ஆராயாமல் மாக்ஸியத்தை எதிர்க்கும் சிலரும் தங்களைவிட மேலாக 21ம் நூற்றாண்டை நோக்கி விரைகின்ற இந்த யுகத்தில் மாக்ஸியத்தை அறிந்தவர்கள் இல்லை என்று நினைக்கிற சிலரும் மாக்ஸிய மரபு சார்ந்த இயக்கங்களைத் தாக்க உபயோகித்த ஒரு சொற்றொடர்.

வேதங்களை ஆழமாக அறிந்த ஒருவனது வைதிகம் எவ்வகையிலும் வரட்டு வேதாந்தத்தைவிட மோசமான சரக்கல்ல, புத்திசாலித்தனமான பழமைவாதம் முட்டாள்தனமான புதுமையைவிடப் பாதுகாப்பானதும் பயனுள்ளதுமாகும். பழமையை எதிர்ப்பது என்பதோ புதுமையை வரவேற்பது என்பதோ குருட்டுத்தனமாகச் செய்யப்படும் காரியமல்ல. எத்தனையோ கணித உண்மைகள் மிகவும் பழையன. பல விஞ்ஞான உண்மைகள் கூடப் பழையன; பாணினியின் மொழியியல் ஆய்வும் பழையது; பரதநாட்டியம் கூடப் பழையது. பழையதை ஒழிப்பதோ அப்படியே நிராகரிப்பதோ புதுமையைப் புகுத்துவதாகிவிடாது; புதுமை என்ற பேரில் வருகிற எல்லாமே பழமையிலும் சிறந்ததாகிவிடாது. பழையது என்றாலும் புதியது என்றாலும் எது மனிதன் முன்னுள்ள யதார்த்தத்தை அறியவும் அதை மனித இனத்தின் மேம்பாட்டுக்கு உகந்தவாறு பயன்படுத்தவும் உதவுகிறதோ அது சரியானதாகிறது, விரும்பத்தக்கதாகிறது. அவ்வாறில்லாது நிராகரிக்கத் தக்கதாகிறது. அதற்கும் மேலாக பழமை—புதுமை விஷயத்தில் எதுவுமே முக்கியமானதுமில்லை. 'புதுமை புதுமைக்காகவே' என்று அதை நாடுபவர்கள் பற்றி நமக்கு அக்கறையும் இல்லை.

கிளிப்பிள்ளைத்தனமாக ஒப்பிக்கப்படுவது வேதமானாலும், விஞ்ஞான சூத்திரமானாலும், பெருக்கல் வாய்ப்பாடானாலும், மாக்ஸியமானாலும் அது நமக்கு அதிகம் பயன் தராது. ஒவ்வொரு விஷயத்தையும் ஆழமான அறிதலும் தெளிவும் கொண்டு அணுகப்படும்போதே அதன் பயனை நம்மால் முழுமையாகப் பெறமுடிகிறது. கிளிப்பிள்ளைத்தனமான வறட்டு மாக்ஸியத்தை லெனின் முதலாக மாஓ ஊடாக இன்று உள்ள மாக்ஸிஸ லெனினிஸ வாதிகள் வரை எல்லாருமே கண்டித்துள்ளார்கள். மாக்ஸியத்தை சில்லறைச் சூத்திர விதிகளாகச் சுருக்குவது பற்றி உருப்படியான எந்த மாக்ஸியவாதியும் மகிழ்ச்சியடைய முடியாது.

ட்ரொட்ஸ்கியவாதிகள் மத்தியில் வறட்டுத்தனத்துக்கு மிகுந்த வரவேற்பு உண்டு. அவர்களுள் பலர் இன்றுங்கூட ரஷ்யப் புரட்சியின் அடிப்படையிலும் வேறு சிலர் பிரஞ்சுப் புரட்சியின் அடிப்படையிலும் இலங்கைப் பிரச்சினைகளை அணுகுகிறார்கள். அவர்களுள் பிரிவினைக்கு ஆதாரமாக போலந்து, அயர்லாந்து நிலவரங்களை ஆதாரம் காட்டுவோரும் உளர். இவர்கட்கு அவர்களெல்லாம் 'வைதிகர்கள்' அல்ல—ஏனெனில் அவர்கள் இவர்கள் விரும்புவதையே கூறுகிறார்கள்.

பிரிவினைக்கு ஆதாரமாக ஏகாதிபத்திய விரோத, காலனித்துவ விரோதப் போராட்டச் சூழ்நிலைகளில் மார்க்ஸ், லெனின் போன்றோர் சொன்னவற்றையும் ஸ்டாலின் தேசிய இனங்கள் பற்றிச் சொன்னவற்றையும் வசதிக்கேற்ப துண்டு துண்டாக வெட்டி மூட்டிச் செய்யப்படும் ஒட்டு வேலைகளைக் கிளிப்பிள்ளைத்தனம் என்பது தவறு. கிளிப்பிள்ளைத்தனத்தில் குறைந்தபட்ச நேர்மையாவது இருக்கின்றது.

'திருடன் திருடன்' என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் திருடன் போல சிலர் 'வைதிக மாக்ஸியம்', 'வரட்டுமாக்ஸியம்' என்று மற்றவர்களை நோக்கி உளறிக்கொண்டு தாங்கள் மாக்ஸியத்துக்கு மனம்போனவாறு கொச்சை வியாக்கியானங்கள் வழங்குகிறார்கள்.

மாக்ஸியத்தை ஏற்பதா விடுவதா என்ற பிரச்சனை அவரவரது சமுதாய நிலைப்பாட்டைப் பொறுத்தது. அதன் நோக்கத்துடன் உடன்பட்டு வேலைமுறையை நிராகரிக்கும் நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனுபவமூலம் மெல்ல மெல்ல உண்மைகளை உணருகிறார்கள். ஆனால் வர்க்கப்போராட்டத்தைவிட இன உணர்வு போன்றன முக்கியத்துவம் அடைந்துவிட்டன என்ற விதமாக வாதிக்கிற சிலர் அதற்கும் மாக்ஸியத்துக்குள் ஆதாரம் தேடுவதும் 'சிங்கள ஏகாதிபத்தியம்' போன்ற கோஷங்களை எழுப்புவதும் பரிதாபகரமான பித்தலாட்டம்.

இவர்களது நோக்கங்கள் தங்களது குறுகிய கால சமுதாயப்பிரச்சனையுடன் மட்டுமே தொடர்புடையன. உலக நிலவரம் பற்றியோ 1950களின் பின்பு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியோ இவர்கட்கு அக்கறை இல்லை. ஏகாதிபத்தியம் வர்க்கப்போராட்டத்தின் களத்தை மாற்றுவதிலும் தன் தேசிய எல்லைகளுள் தொழிலாளிவர்க்கத்தைக் கொஞ்சம் மயக்கமுறச் செய்வதிலும் வெற்றிகண்டுள்ளது உண்மை. ஆனால் மூல முரண்பாட்டின் அடிப்படை அப்படியே உள்ளது. சோவியத் யூனியனின் விகாரப்பாடான வளர்ச்சியின் விளைவுகள் உலகப் புரட்சிக்குப் பாதகமான முறையில் அமைந்துள்ளது உண்மை. அதனால் உலகப் புரட்சிகர இயக்கம் வளராமற் போய்விடவில்லை. சீனாவின் 'கலாச்சாரப்புரட்சி'யால் சீனாவின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியவில்லை. புரட்சிகர இயக்கம் நேர்கோட்டில் வளரும் ஒன்றல்ல. அது நெளிவு சுழிவான வளர்ச்சியையே உடையது. அதன் காரணமாகவே அதற்குத் தலைமை தாங்குவதும் எளியதாக இல்லை. தவறுகள் தோல்விகள் என்பனவற்றினூடாகவே புரட்சிகர இயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. மாக்ஸிய சிந்தனையிலும் சில சமயங்களில் தவறான போக்குகள் இருந்து வந்துள்ளன. அவை மூலமும் மாக்ஸியம் மறைமுகமான ஊட்டம் பெற்றே இருக்கிறது. எனவே ஒரு மாக்ஸியவாதி வரலாற்றை எண்ணி வருந்துவது இல்லை. மாக்ஸியவாதிகளை எதிர்க்க நினைப்போர் மாக்ஸியத்தை மாக்ஸியவாதிகளிடமிருந்து காப்பாற்ற வந்த இரட்சகர்கள் என்ற பாங்கில் பேசுவது புதிய ஒன்று அல்ல. எனவே இவர்கள் மாக்ஸியத்தை எவ்வளவு தூரம்தான் வக்கிரப்படுத்தினாலும் இவர்களது கொச்சைத்தனம் அம்பலமாக அதிக காலம் ஆகாது.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் பெரும் பின்னடைவுகளைக் கண்டுள்ளமை உண்மை. அதன் பெருவாரியான பகுதியினர் தவறான பாதையில் செலுத்தப்பட்டதும் அதனால் கசப்படைந்தமையும் உண்மை. இன்றைய அரசியல் சூழலில் அரசாங்க அடக்குமுறையின் வளர்ச்சியும் எதிர்த்தரப்பின் குழப்பமான நிலையும் இனவாதத்தின் வளர்ச்சியும் பலருக்கும் மனச்சோர்வூட்டுவது அதிசயமில்லை. இந்த நிலையைப் பாவித்து மாக்ஸிய லெனினிஸ இயக்கத்தைப் பற்றி மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை வளர்க்கும் முயற்சியில் எழுப்பப்படும் கோஷங்களையிட்டு மாக்ஸியவாதிகள் கவலைப்படத் தேவையில்லை. இந்த இருண்ட கணத்தின் தேவைகளே மேலும் ஒளியேற்றும் நிர்ப்பந்தத்தை உருவாக்குகிறது. அந்த ஒளியை ஏற்றும் வலிமை மாக்ஸியவாதிகட்கு உள்ளது. கடந்த காலத்தின் பாடங்களை மறக்காதவரை உண்மைகட்கு முகங்கொடுக்க அஞ்சாதவரை இலட்சியத்தை யதார்த்தத்துடன் இணைத்து நோக்க அவர்கட்கு இயலுமாக உள்ளவரை எந்த குரைப்பும் அவர்களைத் தேயச் செய்யப்போவதில்லை.

★

அதை மனித இனத்தின் மேம்பாட்டுக்கு உகந்தவாறு பயன்

பிரிவினைக்கு ஆதாரமாக போலந்து, அயர்லாந்து நில

கரிக்கும் நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள்

ஸிய சிந்தனையிலும் சில சமயங்களில் தவறான போக்குகள்

# பெண் விடுதலையும் புதிய சமுதாயமும்

தேசபக்தன்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தை ஒட்டி ஏற்பட்ட பெண்கள் உரிமை பற்றிய விழிப்பும் போராட்டங்களும் அண்மைக்காலங்களில், முக்கியமாக மேற்கு நாடுகளில், மிகவும் உக்கிரமடைந்து சமுதாய வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் தம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆயினும் பெண்கள் விடுதலை பற்றிய அணுகுமுறை எல்லாஇடத்தும் ஒத்த தன்மையுடையதாகவோ பரந்துபட்ட நோக்குடையதாகவோ இருந்ததில்லை.

ஆண்—பெண் முரண்பாட்டை அடிப்படையில் பகை முரண்பாடாகக் காணமுனைந்தவர்கள் தொடர்ந்தும் இருக்கிறார்கள். அந்த முரண்பாட்டின தீர்வை மிக அடிப்படையான சமுதாயப் பிரச்சனையாக்கி அந்த அடிப்படையிலேயே மற்றப் பிரச்சனைகளை அணுகுவோரும் உள்ளனர். இவற்றைவிட, சமத்துவம் என்கிற கருத்தை இயந்திர ரீதியாகவே அணுகுபவர்கள் பலவேறு தரப்பினர் உள்ளனர். இவர்களைப் போலன்றிப் பெண்கள் சமத்துவத்தையும் உரிமைப் போராட்டத்தையும் சமுதாய வளர்ச்சியின் அடிப்படையில் வைத்து மதிப்பிடவும் அதி முக்கியமான சமுதாய முரண்பாடுகளின் தீர்வுகளினின்று தனிமைப்படுத்தாமல் நோக்கவும் இயலுமானவர்களும் இருக்கிறார்கள், ஆயினும் 60-70களில் மேற்கில் எழுந்து பேரொலி எழுப்பிய பெண்கள் விடுதலைக் குரல்களில் மேலோங்கி நின்றவை பெருமளவும் ஒருமுனைவாதத் தன்மையனவே. பெண்கள் உரிமைபற்றிய பிரச்சனையின் தொடர்ச்சியான வரலாற்று வளர்ச்சி காரணமாகவும், 1960களை ஒட்டிய ஒடுக்கப்பட்ட உலகமக்களது பெரும் எழுச்சிகளது வெற்றிகள் காரணமாயும், அன்றைய காலகட்டத்தில் மேலை நாடுகளில் வெளிப்படுத்தப்பட்ட பலவேறு அதிருப்திகளின் வெகுஜனரீதியான தன்மை காரணமாயும் பெண்கள் உரிமை, சமத்துவம் என்பன பற்றிய உணர்வுகள் பரவலானதுடன் மேலும் ஆழமும் அடைந்தன. பெண்கள் சமத்துவம்-உரிமை தொடர்பான கோரிக்கைகள் முதலில் ஆளும் அதிகார வர்க்கத்தால் ஏளனம் செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டாலும் பல பிரச்சனைகளின் நிஜமான தன்மையாலும், அவற்றின் சமுதாய முக்கியத்துவத்தாலும், அவற்றை முற்றாகவே புறக்கணிப்பதன் அரசியல்-சமுதாயவிளைவுகளாலும் சில முக்கியமான மாற்றங்கள் சட்டரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் ஏற்பட்டன. ஆயினும் பெண்களது நிலை தொடர்பான அடிப்படையானபிரச்சனை தீர்ந்துள்ளதா என்பதைக் கவனிப்போம்.

விவாகரத்து, கருச்சிதைப்புபோன்ற துறைகளில் முக்கியமான சட்டரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை ஏற்படுவதில் பெண்கள் உழைப்பில் ஈடுபடவேண்டிய பொருளாதார நிர்ப்பந்தத்தினதும் கருத்தடை முறைகளின் அபிவிருத்தியினதும் பங்குகளையும் புறக்கணிக்க முடியாது. அதேசமயம் கல்வி-வேலைவாய்ப்புகள் ஊதியம் போன்ற விஷயங்களில் சட்டரீதியான சில திருத்தங்கள் பிரச்சனையைப் பேரளவில் முடிக்கட்டியுள்ளன. இப்பிரச்சனைகள் யாவுமே காலக்கிரமத்தில் தீரும் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் இரண்டு விஷயங்கள் நம் கவனத்திற்கு உரியன. பெண்களை வெறும் போகப் பொருளாகவும் வியாபாரப் பண்டமாகவும் கருதவும் பயன்படுத்தவும் செய்யும் போக்கு அதிகரித்துள்ளது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் பெண்களது சமுதாய உரிமைகளின் முன்னேற்றம் உலக அடிப்படையில் பெண்களது நிலையில் முன்னேற்றத்தை எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை. (முதலாளித்துவ முன்வரிசை நாடுகளில் தொழிலாளர்களது வாழ்க்கைத்தரத்துக்கும் சர்வதேசரீதியான நிலைக்கும் உள்ள உறவை நினைவுகூரலாம்). மேலைநாடுகளில் பெண்களது உரிமைப் போராட்டங்களது வெற்றிகள் வரவேற்புக்குரியன. ஆனால் முழுப் பிரச்சனையின் ஆணிவேரை அவை தகர்க்க முடியாது என்பதை நினைவிலிருத்துவது அவசியம். பிரச்சனையின் தேசிய சர்வதேசியப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் முக்கியமான சமுதாய முரண்பாடுகளினின்றும் தனிமைப்படுத்தி மாதர் உரிமைப் போராட்டத்தினை அணுகல் பயன் அற்றது.

அண்மையில் சீனாவுக்குப் பயணம் செய்த பெண்ணுரிமைவாதப் (பெண்) பத்திரிகையாளர் ஒருவர், அங்கே பெண்கள் சில பகுதிகளில் மிகவும் கடுமையான உடலுழைப்பில் ஈடுபட்டிருப்பதை வைத்து அங்கே பெண்ணுரிமையின் நிலையைத் தாக்கி எழுதியிருந்தார். சீனா இன்னமும் முன்னேறிய தொழில்விருத்தியுடைய நாடு அல்ல பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தான் அங்கே பல பகுதிகளில் மிகவும் கடினமான உடல் உழைப்பில் ஈடுபடுகிறார்கள். அந்த அம்மாள் சீனா அபிவிருத்தியில் பின்தங்கிய நாடு (அதாவது அமெரிக்காவோடோ ஐரோப்பாவோடோ ஒப்பிடுகையில்) என்று சொல்லியிருந்தால் அது நியாயமானது. அதை யாருமே மறுக்கவில்லை. பெண்கள் மட்டுமே கடுமையாக உழைப்பதாக இருந்திருந்தால் அல்லது அவர்களது உழைப்பின் பயன் அவர்கட்குப் பயன்படாமல் வேறுயாராலோ சுரண்டப்பட்டு இருந்தால் அது கண்டனத்துக்குரியது. சீனாவில் பெண்களது நிலை முற்றுமுழுதாகத் திருப்தியான ஒன்றல்ல. அங்கே இன்னமும் பழைய சமுதாயத்தின் நிழல் முற்றாக மறைந்துவிடவில்லை. ஆனால் இவ் விஷயத்தில் சீனாவின் சாதனை எந்த மூன்றாமுலக நாட்டையும் விடவும் உயர்வானது என்பதுடன் ஒப்பிடத்தக்க கால அளவிற்குள் எந்த மேலை முதலாளித்துவ நாட்டைவிடவும் பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்பதும் சீனாவில் சமுதாய மாற்றத்தின் போக்குமே அதிக முக்கியம் வாய்ந்தவை. அந்த அம்மாளுடைய கருத்துக்கள் உடலுழைப்பைக் கேவலமாகக் கருதும் அவரது மனநிலைக்கும் மேலாக எதையுமே காட்டவில்லை.

மேற்கு ஐரோப்பாவைவிட அதிக அளவில் கிழக்கு ஐரோப்பாவிலும், சோஷலிஸப் புரட்சி ஏற்பட்ட பிற நாடுகளிலும் பெண்கள் ஆண்களுடன் சரிநிகராக விஞ்ஞானம் தொழில் நுட்பம் மருத்துவம் ஆகிய துறைகளில் இயங்கமுடிவதும் கவனத்துக்குரிய ஒன்று. மேற்கூறிய விஷயங்கள் மனதிற்கொண்டு நம் நாட்டில் உள்ள பெண் விடுதலை இயக்கத்தைப் பற்றிக் கவனிப்போம். இலங்கையில் பெண்கள் உரிமை பற்றிய இன்றைய விழிப்புணர்வு மேலைநாடுகளினது போன்று

(6ம் பக்கம் பார்க்க)

## ஒரு கேள்வியும் பதிலும்

# தனிநபர்வாதம் என்றால் என்ன?

அவதானி

மார்க்ஸிஸ நடைமுறை தனிநபர் வாதத்தை நிராகரிக்கிறது என்கிறோம். தனிநபர் வாதம் என்றால் என்ன? பலரும் மனிதர்களது தனித்துவத்தையும் தனிநபர் வாதத்தையும் போட்டுக் குழப்பிக்கொள்கிறார்கள். மார்க்ஸிஸம் சிந்தனை மனிதனது தனித்துவத்தை நிராகரிக்கவில்லை. மனிதன் சமுதாய விலங்காக உள்ள அதே சமயம் தனியொருவனாகவும் இருக்கிறான், சுரண்டல் சமுதாய அமைப்பின் வளர்ச்சியூடாக முதலாளித்துவத்தின் தோற்றம் தனி மனிதனது தனித்துவத்தைப் பல வகைகளிலும் சிதைத்து விட்டது. மனிதத் தன்மையைக் கூட முதலாளித்துவம் சிதைத்துவிடுமளவுக்கு அதன் இலாபவேட்கை உள்ளது. மார்க்ஸியம் மனித இனத்தினது விடுதலையை, விமோசனத்தை நாடிநிற்கும் சித்தாந்தம். எனவே மார்க்ஸியம் மனிதனது தனித்துவத்தைப் பேணவே முனைகிறது. அவ்வாறானால் மார்க்ஸியத்துக்கும் தனிநபர் வாதத்துக்குமிடையிலான முரண்பாடு என்ன?

மார்க்ஸியம் தனி மனிதனைச் சமுதாய மனிதனினின்று பிரித்து நோக்கவில்லை. மனிதன் ஒருபகுதி தனி ஒருவனும் இன்னொரு பகுதி சமுதாய மனிதனுமாகவுமே இருக்கிறான். ஆதி சமுதாயங்களில் எளிமையான சமுதாய அமைப்புக்காரணமாக சமுதாயத்துக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு கூடுதலாக விளைந்துகொடுக்கக்கூடியதாக இருந்தது. இன்று சமுதாய வளர்ச்சி காரணமாகத் தனி மனிதன் தன் தேவைகட்குப் பேருமளவுக்கும் சமுதாயத்தையே சார்ந்து நிற்பதோடு தானும் நேரடியான சமுதாயச் சூழலின் விளைபொருளாகவே இருக்கிறான். சமுதாய அமைப்பானது வரலாறு, சமுதாயச் சூழல், வர்க்கஅடிப்படை, வர்க்க உணர்வு, தேசிய, பிரதேச, சர்வதேச நிலவரங்கள் போன்றயாவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மனிதனது தன்மையை நிர்ணயிக்கின்றன. எனவே இவற்றை எல்லாம் கடந்து தனிமனித இயல்பை வருணிப்பது கருத்தற்றது. மனிதன் சமுதாய விலங்காகஉள்ளதாலும் சமுதாய வாழ்க்கை சிக்கலான தன்மையுடைய ஒன்றாகி விட்டதாலும் மனித இனத்தின் விமோசனத்தின் சமுதாயத்தன்மை எவ்வாறு தவிர்க்க இயலாத ஒன்றோ அவ்வாறே தனி மனிதனது விமோசனமும் தன் சமுதாயத் தன்மையினின்று பிரிக்க முடியாத ஒன்றாக உள்ளது. மார்க்ஸியம் மனிதனை சமுதாய அடிப்படையில் நோக்குவதோடு மனிதனது தனித்துவம் முழு மனித இனத்தினதும் சமுதாயரீதியான விடுதலையின் கீழேயே தழைக்க முடியுமென்று கருதுகிறது. எந்த அடிமைத் தனத்தையும் ஆதாரமாகவோ நட்புறவுடையதாகவோ கொண்ட தனிமனிதத்துவம் இறுதியில் தன் சுதந்திரத்தையுமே அழித்துக்கொள்ளும் தன்மையுடையது. சமுதாயத்தின் சுதந்திரத்தைப் பேணாமலும் சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவராமலும் பேணுகிற தனி மனித சுதந்திரம் அத்திவாரம் இல்லாத ஒரு கட்டிடம். அதனாலேயே சமுதாய விடுதலைக்குப் புறம்பான தனி மனித சுதந்திரத்தை மார்க்ஸியம் மறுக்கிறது.

இந்தநிலைப்பாடு மார்க்ஸிய விரோதிகளால் திரிபு செய்யப்பட்டு, மார்க்ஸியம் தனிமனித சுதந்திரத்துக்கு மாறானது என்று பிரசாரம் செய்யப்படுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் கூறப்படும் தனிமனிதனது சுதந்திரம் என்ன? பணம் படைத்தவனுக்கு மற்றவனைச் சுரண்டும் சுதந்திரம்! வலிமை படைத்தவனுக்கு மற்றவனை அடக்கி ஆளும் சுதந்திரம்! முதலாளித்துவம் தன் 'சுதந்திர' வரையறைகட்குள் சில சமயம் ஜனநாயக, மனித உரிமைகளையும் அனுமதிக்கிறது. அது குட்டி பூஷ்வாக்களின் 'தனிமனித'த் தன்மையையும் சிலசமயம் உற்சாகப்படுத்துகிறது. அத் தனிமனிதத் தன்மை தனக்குமாறாக வலிய குரலாகும்போது அதைப் பல்வேறு வகைகளில் அடக்கவும் திசைதிருப்பவும் முற்படுகிறது. ஆழமற்ற, வரலாற்று நோக்கில்லாத பார்வையில் முதலாளித்துவ சமுதாயத்தின் 'தனி மனித சுதந்திரம்' (முக்கியமாக ஏகாதிபத்தியச் சுரண்டலின் கூரிய முரண்பாடுகளைத் ஏகாதிபத்தியத்தின் தேச எல்லைகட்கு வெளியே தள்ளி வைத்து விட்ட நிலையில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவது) குட்டி பூஷ்வாக்களுக்குக் கவர்ச்சியாகவே தோன்றும். அவர்கள் தமது வர்க்கத்தின் குறுகிய காலக் கண்ணோட்டத்தைப் பரவலாகவே எல்லாத் துறைகட்கும் நீடிக்கிறார்கள். சமுதாய நோக்கைவிட தனி மனித நோக்கிலே பிரச்சனைகளை அணுகுவது குட்டி பூஷ்வா சிந்தனையின் ஒரு முக்கிய வெளிப்பாடு. இதுசில சமயங்களில் இடதுசாரி இயக்கத்தையும் தீவிரமாகப் பாதித்து விடுகிறது. சில 'இடதுசாரித்' தலைவர்கள் கூட மிகுந்த தனிநபர்வாதப் பாதிப்புடையவர்களாகிச் சீரழிந்திருக்கிறார்கள். (ட்ரொட்சிச வாதிகள் மத்தியில் தனிநபர்வாதம் மிகவும் சகஜம்) தனிமனிதனது அபிப்பிராயம் சமுதாயரீதியான அபிப்பிராயத்துடன் முரண்படுவதில் தவறு இல்லை. பல சமயங்களில் சரியான சிந்தனை சிறுபான்மைப் போக்காக இருந்தே பரந்துபட்ட வளர்ச்சியைப் பெறுகிறது. மார்க்ஸியம் தனிமனிதனது சுவாதீனமான சிந்தனையை நிராகரிக்கவில்லை. ஆனால் தனிமனிதனது சுயாதீனமான சிந்தனை சமுதாய அடிப்படையில் அமையாது சமுதாயப் போக்கிற்குத் தன்னை முரணாக வைத்துச் செயற்பட முனையும்போது அது எவ்வளவுதான் சரியான நியாயங்களை உடையதானாலும் அதன் தகுதிக்குரிய பயனைத் தராததோடு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தவும் முடியுமாகிறது. ஒரு வெகுஜன இயக்கத்தில் தனிநபர்வாதம் பிளவுகட்கும் அவசியமற்ற பகை முரண்பாடுகட்கும் காரணமாக அமைவதற்குக் காரணமே தனிநபர்வாதிகள் மற்றவர்களை விடத் தங்களையே எப்போதும் முதன்மைப் படுத்திக் கொள்கிறார்கள் என்பதே. தாங்களே எப்போதும் சரியாகவும் மற்றவர்களே (தம்மோடு முரண்படும் ஒவ்வொரு நிலையிலும்) தவறாக இருப்பதாகவும், தங்களது எண்ணங்களை மற்றவர்கள் ஏற்று நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர்களது போக்கு அமைகிறது. தனிநபர்வாதத்தின் பிரச்சனைகளையிட்டு மார்க்ஸிய லெனினிஸ இயக்கங்களுள் ஓரளவு அனுபவரீதியான தெளிவு இருப்பதால் தனிநபர்வாதம் காரணமான கெடுதல்களினின்று இயக்கத்தைக் காக்க முடிகிறது.

இதற்குமாறாக, மார்க்ஸிய அணுகுமுறையில்லாத இயக்கங்களுள் அல்லது தனிநபர் வாதத்தைச் சரியாகக் கையாளமுடியாத குழுக்களுள் தனிநபர்வாதம் பிளவுகட்கும் பகைமைக்கும் சூட்சிகட்கும் பழிவாங்கும் நடவடிக்கைகட்கும் மட்டுமன்றி பிரகடனப்படுத்தப்பட்ட நோக்கங்கட்கு விரோதமானவாறு தனிநபர் ஒருவரது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்றவாறு இயக்கம் செயற்படவும் இடம் உண்டாகிறது.

இலங்கையின் அரசியலில், முக்கியமாக சிறு குழுக்களைக் கொண்டுள்ளதும் தனிநபர்களையே மையமாகக் கொண்டு இயங்குவனவுமான 'இயக்கங்கள்'ளது செயல்களை அவதானித்தால் தனிநபர் வாதத்தை உணர அதிகம் கஷ்டம் இராது.

தனிநபர்வாதம் என்பது சுதந்திரமான சிந்தனையையோ, சுயர்தீனமான துணிவான செயலாற்றலையோ குறிப்பதல்ல. அது ஒரு தனிநபரினது (அல்லது அவரோடொட்டிய ஒரு சிறு குழுவினது) முதன்மையை சமுதாயத்திற்கும் ஒரு இயக்கத்திற்கும் மேம்பட்டதென்று நடைமுறையில் வலியுறுத்துவது ஆகும்.

மார்க்ஸிய லெனினிஸம் பரந்துபட்ட வெகுஜனநலனைச் சார்ந்தும் ஸ்தாபனரீதியான ஜனநாயகவிதிகளை அனுசரிப்பதுமான சுதந்திரமான சிந்தனையையும் சுயாதீனத்தையும் துணிகரமான கருத்து வெளிப்பாட்டையும் அடிப்படையில் வரவேற்கிறது. இயக்கத்தையுஞ் சமுதாயத்தையும்விட மேலாகத் தம்மை முதன்மைப்படுத்துவோரையே அது எதிர்க்கிறது.

★

...கிருர். ஆதி சமுதாயங்களில் எளிமையான சமூதாய அமைப்புக்காரணமாக சமுதாயத்துக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு கூடுதலாக வளைந்துகொடுக்கக்கூடியதாக இருந்தது. இன்று சமுதாய வளர்ச்சி காரணமாகத்

...யுடையது. சமுதாயத்தின் சுதந்திரத்தைப் பேணுமலும் சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவராமலும் பேணுகிற தனிமனித சுதந்திரம் அத்திவாரம் இல்லாத ஒரு கட்டிடம். அதனுலேயே சமுதாய விடு

வா சிந்தனையின் ஒரு முக்கிய வெளிப்பாடு. இதுசில சமயங்களில் இடதுசாரி இயக்கத்தையும் தீவிரமாகப் பாதித்துவிடுகிறது. சில 'இடதுசாரித்' தலைவர்கள் கூட மிகுந்த தனிநபர்வாதப் பாதிப்புடைய

தெளிவு இருப்பதால் தனிநபர்வாதம் காரணமான கெடுதல்களினின்று இயக்கத்தைக் காக்க முடிகிறது.

இதற்குமாருக, மார்க்ஸிய அணுகுமுறையில்லாத இயக்

...கிறது. இயக்கத்தையுஞ் சமுதாயத்தையும்விட மேலாகத் தன்மை முதன்மைப்படுத்துவோரையே அதுஎதிர்க்கிறது.

★

# மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இனக் குரோதம் வளருகின்றன!

பிரான்சில் ரல்போட் வாகன உற்பத்தித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சென்ற டிசம்பரில் ஒருமாதம் வேலைநிறுத்தம் செய்தனர். தொழிலாளர்களை வேலை நீக்கம்செய்வதை பிரஞ்சு அரசாங்கம் அங்கீகரித்ததைத் தொடர்ந்தே இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இந்த தொழிற்சாலையில் வேலைசெய்வோரில் 70 வீதமானவர்கள் வெளிநாட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெளிநாட்டவர்கள் தத்தமது நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் எனவும் பிரஞ்சு அரசாங்கம் தெரிவித்தது.

அண்மை வருடங்களில் அடிக்கடி மேற்கு ஐரோப்பாவின் இனப்பாகுபாடு வெளிப்படுத்தப்பட்டது. பிரான்சில் வடஆபிரிக்காவிலிருந்து வந்த தொழிலாளர்களை ஒரு சிறிய இனவாதக்குழு துன்புறுத்தியது. ஜேர்மன் சமஷ்டி குடியரசில் தீவிர வலதுசாரிகள் துருக்கிய தொழிலாளர்களைத் தாக்கினர். இலண்டனில் பிறிக்ஸ்டன் மாவட்டத்தில் கறுத்த மக்கள் கிளர்ச்சி செய்தனர். சில மேற்கு ஐரோப்பிய அரசாங்கங்கள் நாட்டுக்குள் வருவோருக்கு எதிராகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துவருகின்றன. குடிவரவுச் சட்டங்களை இரண்டு தடவை பிரித்தானிய அரசாங்கம் திருத்தி அமைத்தது. சுவிற்சலாந்து குடிவரவு விசா விடயத்தில் நிபந்தனைகளை கடுமையாக்கியது. பிரான்சைப் போலவே ஜேர்மன் சமஷ்டிக் குடியரசும் வெளிநாட்டவரை தத்தம் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பத் திட்டமிடுகிறது.

பல்வேறு சரித்திர காரணங்களுக்காக 1 கோடி 25 இலட்சம் வெளிநாட்டவர் மேற்கு ஐரோப்பாவில் தங்கிவிட்டனர். இவர்களுள் சிலர் பலவருடங்களுக்குமுன் வியட்நாமிலிருந்து தப்பியோடிய இந்தோ சீன அகதிகளாவர். ஆனுல்பெரும்பாலான தொழிலாளர்கள் 20 அல்லது 30 வருடங்களுக்கு முன் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சேர்த்துக்கொண்டவர்களாகும். ஒரு சமயம் உழைப்பாளிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் வரவேற்கப்பட்டவர்கள். அந்நியத் தொழிலாளர்கள் மிகவும் கடினமான கேவலமான தொழில்களைச் செய்து மேற்கு ஐரோப்பா யுத்தத்திற்குப் பிந்தியகாலப் பகுதி 'பொருளாதார அதிசயத்தை' உருவாக்கஉதவினர்.

ஆனுல் 1970 களுக்குப் பின் முதலாளித்துவ உலகம் ஒன்றன்பின் ஒன்ருக மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளானது. இதனுல் ஐரோப்பாவில் குடியேறிய தொழிலாளர்கள் சாதகமற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பத்து நாடுகளில் வேலையற்ருேரின் எண்ணிக்கை ஒரு கோடி 23 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. இந்த நாடுகளின் பொருளாதாரச் சக்தியின்வீழ்வால் இனப் பாரபட்சத்தை தூண்டிவிட்டுள்ளனர். குடியமர்ந்த அந்நியத் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும் வேலையற்றிருப்போரின் எண்ணிக்கைக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாகப் பலர் கூறுகிருர்கள்.

இந்தச் சூழ்நிலைகளில் இங்கிலாந்தில் வந்து குடியமர்ந்தவர்கள் தொழில்வாய்ப்பு வீட்டுவசதி, மருத்துவ வசதி என்ற துறைகளில் பாரபட்சம் காட்டப்படுகின்றனர். மேற்கு ஜேர்மனியில் பதினுறு இலட்சம் துருக்கியர்கள் இருக்கிருர்கள். இது துருக்கிய எதிர்ப்புணர்வை அங்கு தோற்றுவித்துள்ளது. "நாம் இளமையாக இருக்கும்போது கடினமாக உழைத்தோம்; உடல்நலனை நாசம்செய்தோம் ஆனுல் இன்று வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளோம்" என ரல்போட் மோட்டர் வாகன தொழிற்சாலையின் குடியமர்ந்த தொழிலாளர்கள் கூறுகிருர்கள். பிரான்சில் 25 வருடமாக வேலைசெய்த ஒரு மொரோக்கோ தொழிலாளி "இப்போது பிரான்சுக்கு எம்மைத் தேவையில்லை. ஆனுல் எனது சொந்தநாட்டிற்குத் திரும்பிப்போனுல் அங்கு ஒரு வேலையை என்னுல் தேடிக்கொள்ளமுடியாது" எனக் கூறுகிருர். 'எமது மூன்று குழந்தைகளும் உணவு கேட்கின்றனர். அவர்களுக்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது' எனக்கூறி அந்த தொழிலாளியின் மனைவி அழுதார்.

மேற்கு ஐரோப்பாவில் இனப்பாகுபாடு பரவுகிறது. ஆனுல் இந்தப்போக்கை நல்லெண்ணம் படைத்தவர்கள் கண்டித்துள்ளனர். பிரேஞ்சுப் பத்திரிகையான லெ மொன்டே' அந்நாட்டில் வந்து குடியமர்ந்த அந்நியத் தொழிலாளர்கள் ஆற்றிய சேவையின் மாபெரும் பங்களிப்புக்காக பாராட்டுத் தெரிவித்த கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. இலண்டன் சிற்றிகவுன்சில் 1984க் ஆண்டை "பாரபட்சத்திற்கு எதிரான ஆண்டாக" தெரிவு செய்துள்ளது. சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தோசீன அகதிகளை ஏற்று அவர்களுக்கு தொழிலும் வழங்கியுள்ளன.

தற்போது மேற்கு ஐரோப்பாவிற்கும் மூன்ருவது உலகிற்கும் பரஸ்பர அக்கறையும் ஒன்றையொன்று சார்ந்தும் இருக்கவேண்டியுள்ளது. குடியமர்ந்தவர்களின் பிரச்சினையைத்தீர்த்து வைப்பது இந்த பரஸ்பர நலஉறவுக்கு ஒரு முக்கிய படியாக அமையும். மேற்குஐரோப்பாவில் பொருளாதார பின்னடைவுகளுக்கும் குடியமர்ந்த தொழிலாளர்களுக்கும் எதுவித தொடர்புமில்லை. இவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதால் பொருளாதாரப் பிரச்சினையை மேற்கு ஐரோப்பா தீர்த்துவிடமுடியாது.

★

# ஒரு பார்வை
# நதிக்கரை மூங்கில்

★ சண்முகன்

## முரணற்ற சிந்தனை ஓட்டமும் கலை நயம் கொண்ட வார்த்தைகளும் கவிதைகளுக்கு உயிர் கொடுக்கின்றன!

பேராசிரியர் சிவசேகரம் எழுதிய கவிதைகள் சில புத்தக உருவம் பெற்றுள்ளன. பெங்களூர் காவ்யா வெளியீட்டினர் இக் கவிதைகளை ஒரு தொகுதியாக்கி நதிக்கரை மூங்கில் என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர்.

தரமான அட்டைப்படம், நேர்த்தியான பக்க அமைப்பு புத்தகத்தை அழகு படுத்துகின்றன. ஆங்காங்கே ஓரிரு எழுத்துப்பிழைகள் இருந்த போதிலும் அவை அதிக தூரம் கவிதைகளின் உயிரோட்டத்தைப் பாதிக்கவில்லை. இருந்தாலும் அப்பிழைகள் தவிர்த்திருக்கக் கூடியவதே.

காவ்யா வெளியீட்டினரின் சுருக்கமான பதிப்புரை கவிதைகளையும், கவிஞர் சிவசேகரத்தையும் வேறொரு கோணத்தில் காட்ட முற்படுகிறது. திராவிட இயக்க அரசியல் பாணியில் அழுது கொட்டி சிவசேகரத்தையும் அவரது கவிதைகளையும் தமது புலம்பலுக்கு துணையாக்க பதிப்புரை முற்படுகிறது. காவ்யா வெளியீட்டினர் சிவசேகரத்தை முழுமையாகத் தெரியாதவர்களாக இருந்திருக்கமுடியாது. அப்படி என்றாலும் கூட அதே கவிதைத் தொகுதிக்கு சிவசேகரம் வழங்கியுள்ள நீண்ட முன்னுரையைப் படித்த போதாவது தெரிந்திருக்க வேண்டும். பதிப்புரையை, முன்னுரையை, கவிதைகளைப் படிப்பவர்களுக்கு நிச்சயம் பதிப்புரையில் கூறப்பட்ட வாருக கவிதைகளினதும், சிவசேகரத்தினதும் நிலை இல்லை என்பதைப் புரிந்து கொள்வது அதிக சிரமம் இருக்காது.

களையும் அவரே முன்னுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். "கலையும் இலக்கியமும் அரசியல் சமுதாயச் சார்பு உடையன என்ற உணர்வும், என் இளமைக் காலத்தின் 'தீவிர தமிழ் இன உணர்வின்' பிடிப்பினின்று மீட்சியும், மார்க்ஸிசச் சிந்தனையின் ஈர்ப்புமே என்னை எழுதத் தூண்டின என்று நினைக்கிறேன்" என்று கூறுகிறார்.

முன்னுரையில் அவர் முன்வைத்த தெளிவான சிந்தனைப் போக்கு அவரது கவிதைகளில் பரந்திடப்பதைக் காணமுடியும். வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களை வெவ்வேறு கோணங்களில் இருந்து அக் கவிதைகள் சுட்டிக்காட்டுகின்றன. இயற்கை வர்ணிப்பு, அம்பலப்படுத்தல், கண்டனம் தொடுத்தல், விமர்சன அணுகல், இண்டல் நடை, நம்பிக்கையூட்டல், வரலாற்றை உணர்த்தல் என்பன நண்பர் சிவசேகரத்தின் கவிதைகளில் கலைநயமிகுதியுடன் காணப்படுகின்றன.

உதாரணமாக அவரது இயற்கை வர்ணிப்பு வெறும் வார்த்தை ஜால வர்ணிப்பு அல்ல. அல்லது இங்கொன்றும் அங்கொன்றுமான இடைச்செருகல் சொற்சிலம்பங்கள் அல்ல. அவை ஒழுங்குபடுத்தப்பட்ட சொற்சித்திரங்களாக, வாழ்க்கை அனுப

போல் 'எழுச்சி' என்னும் எட்டுவரிக்கவிதையானது மனிதகுலத்தின் இடையிறாத சமுதாய மாற்றத்திற்கான வர்க்கப் போராட்டத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. 'மாவலியின் மார்கழியில்' கவிதை சமகாலச் சம்பவங்களை வெகு நுணுக்கமாக பின்னியுள்ளதுடன், சமகாலத் துயரங்களுக்கு காரணமான பழைய உலகம் மாற்றப்படவேண்டியுள்ளதையும் மாற்றும் நம்பிக்கையையும் தெளிவாக்குகிறது.

வீரசூரிய வேறொரு கோணம், 'ஹிட்லர் டயறிகள்', 'தபால் தலை', '52' போன்றன இன்றைய அரசியல் தகிடுதத்தங்களையும், ஏமாற்றுத்தனங்களையும் அம்பலப்படுத்துகின்றன.

அதேபோல் 'எங்கள் குருஷேத்திரம்' 'நாங்கள் விமர்சகர்கள்' போன்றன இண்டலும், கேலியும் நிறைந்து, போலிவேஷதாரிகளை சுட்டவேண்டிய இடங்களில் சுட்டிநிற்கின்றன.

'ஒரு சமகாலச் சிறுவர் கதை 'உன் மண்ணும் என மண்ணும்', 'பாட்டன் பரம்பரை' என்பன வரலாற்றுச் சிந்தனைகளை ஒரு தெளிவான வர்க்கப்பார்வையுடன் உணர்த்தி மிக ஆழமான சிந்தனைப் பதிவுகளை ஏற்படுத்தும் விதமாகப் புனையப்பட்டுள்ளது.

இவ்வாறு நண்பர் சிவசேகரத்தின் கவிதைகளின் உள்ளடக்கம் சமுதாயப் பிரச்சினைகள் தழுவியதாகவும், வாழ்க்கையின் யதார்த்த

நீண்ட வெறும் அர்த்தமற்ற சொற்கோர்வைகளாக அன்றி சுருக்கமானதாகவும் ஒவ்வொரு வார்த்தையும் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்து பிரயோகிக்கப் பட்டிருப்பதாகும். உதாரணமாக '52' என்ற தலைப்பில் வரும் பதினேழு வரிகளை மட்டும் கொண்டகவிதைவெலிக்கடையில் இடம்பெற்ற தமிழ்க் கைதிகளின் கோரக் கொலைகளைச் சித்தரிப்பதாகவுள்ளது நடந்த சம்பவங்களின் சாராம்சத்தை மிகவும் இறுக்கமான கலைநய வார்த்தைகளில் கவிதையாக்கப்பட்டுள்ளது கவிஞரின் கலையாற்றலை மட்டுமல்லாது அச் சம்பவத்தின் மீது கொண்ட மனஉணர்வுகளையும் வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

நண்பர் சிவசேகரத்தின் கவிதைகள் சமுதாய நோக்குடைய தெளிந்த இயங்கியல் பார்வை கொண்ட கலாபூர்வமான சிருஷ்டிகளாகும். அங்கே வெற்றுக்கோஷங்களுக்கோ அன்றி வெறுமையடைந்த சொற்பிரயோகங்களுக்கோ இடம் இருக்கமுடியாது. இருந்தபோதிலும் அவரது இயற்கை வர்ணிப்புக்கான கவிதைகள் சமூதாய அரசியல் நோக்கில் ஆழ்ந்து நோக்கும் ஒரு பிரிவினரால் மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடியதாகும். சாதாரண மக்கள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும் போது அவர்களால்

# கலை இலக்கிய அரங்கம்

## திசை தவறிய மாஜி நண்பனுக்கு

'இல்லாத ஊருக்கு
நாளை புறப்பட்டு
நேற்றிரவு போய்ச்சேர
இந்த இரவின்
இருளால் வழிகாட்டு'
என்றென்னைக் கேட்டாய்.
'ஏலாது' என்றேன்.
'எதிரி' என என்னை
ஏசிவிட்டுப் போனாய்.

முன்னொருநாள்
போகும் இடந்தெரிதல்
வழிதெரிதல், வகைதெரிதல்
நேரம் தெரிதல்
எதுவும் பெரிதல்ல:
போதல் தனியே
பெரிது' என ஓதிக்
'கீதை மொழி' என்றாய்.
என்னுட் சிரித்தேன்:
என்றோ தெளிவாய்
என்ற எதிர்ப்பார்ப்பில்
ஏமாற, வந்தாய்
இரவில் வழிகேட்டு

என்னை ஒழித்தால்
உன்னை வழிகாட்ட
இல்லாமலோ போவார்?
போனாய்.

விடியலிலே
வாலைத் தூக்கி
வளைய வளைய வரும்
நாய்போற் திரிகிறாய்
திசைகெட்டு

ஏறுகிற
வெய்யிலுடன் ஏறுகிற
வேகத்தில் ஓடுவாய்:
நேரத்தை வெல்லும்

இல்லை என்பதைப் புரிந்து கொள்வது அதிக சிரமம் இருக்காது.

கவிஞர் சிவசேகரத்தின் சகல கவிதைகளுக்கும் அரசியல் சமுதாயச் சார்பு என்பது உண்டு. அந்தச் சார்பு பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தில் அமைந்த ஒன்றாகும். வெறும் இன உணர்வின் வழியாகவோ அன்றி இரக்கப்படும் மனிதாபிமான உணர்வின் வெளிப்பாடாகவோ அவரின் கவிதைகளை காண முடியாது. தனது கவிதைகளின் நோக்கையும், தன்னை எழுதத்தூண்டிய சூழ்நிலை

பங்கள் அல்ல. அவை ஒழுங்குபடுத்தப்பட்ட சொற்சித்திரங்களாக, வாழ்க்கை அனுபவத்துடன் இணைக்கப்பட்டவைகளாகவே அமைந்துள்ளன. 'ஒரு பெருமழைக்குப் பின்', 'சித்திரையில் மாவலி' 'வசந்தம்', 'மறுப்பு', 'நிழல்', 'இலையுதிர்கால அரசியல் நினைவுகள்', போன்ற கவிதைகள் இயற்கையினூடே வாழ்க்கையின் யதார்த்தங்களைக் காட்டி நிற்கின்றன. 'நெல்' என்ற நாலடிக் கவிதை இயற்கையின்—மனிதகுலத்தின் வரலாற்றுத் தத்துவத்தையே போதித்து விடுகிறது. அதே

ளடக்கம் சமுதாயப் பிரச்சினைகள் தழுவியதாகவும், வாழ்க்கையின் யதார்த்த நிலைமைகளை கலை நுணுக்கத்துடன் படம்பிடிப்பது போன்றும் காணப்படுகின்றது, இவ் உள்ளடக்கம் மார்க்சிச தத்துவ மூலாதாரத்தில் நின்று சோர்த்தெடுக்கப்பட்டுள்ளது. அதனால் கவிதைகளில் முனைப்பின முரண்பாடுகளை, சிந்தனைக் குழப்பத்தைக் காண்பது இயலாத ஒன்றாகவே உள்ளது.

சிவசேகரத்தின் கவிதைகளில் காணப்படும் மற்றொரு சிறப்பு யாதெனில் கவிதைகள்

கூடியதாகும். சாதாரண மக்கள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும்போது அவர்களால் அக் கவிதைகளும் அவற்றின் உள்ளடக்கமும் எவ்வளவிற்கு புரிந்து கொள்ளக் கூடியது என்பது கவிதைகளைப் படித்தபோது மனதில் எழுந்த ஒரு சிறு கேள்வியாகும்.

நதிக்கரை மூங்கில் கவிதைகளுக்குரிய நண்பர் சிவசேகரம் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ளகுறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவர்

(7ம் பக்கம் பார்க்க)

வெய்யிலுடன் ஏறுகிற
வேகத்தில் ஓடுவாய்:
நேரத்தை வெல்லும்
குறிபோலும்-
'ஒரு கணமே
நில்' லென்றாய் நீகுரைப்பாய்
அல்லாது கடிப்பாய்.
அறிவேன். அகல்கின்றேன்.
உன்வேலை என்றால்
ஓடல் இயலாது
ஆனால் எனக்குப்
போகும் இடம் தெரியும்,
வேளை, வழி, வகையும்.

... சேகர்

# பெண் விடுதலையும்

5-ம் பக்கத் தொடர்...

நீண்ட வரலாற்று அடிப்படையை உடையதல்ல. மேலை நாடுகளில் பெண்களது ஜனநாயக உரிமைகள் பெண்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் போராடி வென்றவை. நமது சமுதாயத்தில் சில வரலாற்றுச் சூழல்கள் காரணமாக, பல சீர்திருத்தங்கள், பிற மூன்றாமுலக நாடுகளில் தேசிய வரலாற்று நிர்ப்பந்தங்கள் காரணமாக ஏற்படுமுன்னரே, ஏற்பட்டு விட்டன. நமது நாட்டில் பெண்ணடிமைத்தனம் சமுதாய சம்பிரதாயங்களால் நீடிக்கப்படுமளவுக்கு சட்டத்தின் குறைபாடுகளால் தொடர்வதாகக் கருதமுடியாது. சரீர உழைப்பிற்கான ஊதியத்தில் ஆண்-பெண்-சிறுவர் அடிப்படையிலான வேறுபாடு தொடரவே செய்கிறது. ஆனால் நடுத்தர வர்க்கத்தைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சனை இல்லை: நம் பெண் உரிமை விடுதலை இயக்கங்களிடையே முழுமையான சமுதாயக் கண்ணோட்டத்தில் பிரச்சனைகளை அணுக முயல்வோர் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆயினும் பெண்ணுரிமை பற்றிய உக்கிரமான உணர்வுகள் படித்த நகர்வாழ் மத்தியதர வர்க்கத்திற்கு உரியதாகவே இருக்கிறது. இவர்களைப் பொறுத்தவரை பெண்ணுரிமை என்பது ஆடை அலங்காரம், பழக்க வழக்கங்கள் போன்ற விஷயங்களைத் தொடுமளவிலும் குடும்பத்தில் வேலை, பொறுப்பு, அதிகாரம் ஆகியவை பற்றிய வாதப் பிரதிவாதங்களிலும் சில சமயங்களில் திருமணம் விவாகரத்து போன்ற விஷயங்களில் சட்டரீதியான நுணுக்கங்களில் ஈடுபாடுள்ள அளவிலுமே உள்ளது. இவர்களில் உயர்நடுத்தர வர்க்கத்தினருக்கு வீட்டில் வேலையாட்கள் உபகரண வசதிகள் மோட்டார் வாகனங்கள் போன்றவை இருப்பதால் பெருமளவிற்கும் பிரச்சனைகள் நடைமுறையில், ஆண்களளவுக்குத் தங்களது ஆடை அணிகள் பழக்க வழக்கங்களை மேல்நாட்டுத் தன்மையின வாக்குவது தொடர்பானவையாகவே உள்ளன. சில சூழல்களில் பெண்களது கல்வி வேலைவாய்ப்பு வசதிகள் பற்றிய விடயங்களில் அக்கறை காட்டப்படுகிறது. இங்கேயும் பிரச்சனைகளின் வரையறைக்குட்பட்ட தன்மை தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறது. இவ்வளவுக்கும் அப்பால் பெண்ணடிமைத்தனம் தொடர்ந்தும் நீடிக்கிறது.

நிலமான்ய சமுதாயம் ஏற்படுத்திய சில சமுதாய உறவுகளும் மரபுகளும் முதலாளித்துவ சமுதாயத்திலும் வேறுபடும் கால வரையறைக்குத் தொடர்கின்றன. நம்முடையதுபோன்று அரைகுறையான முதலாளித்துவ வளர்ச்சியுடைய, பின்தங்கிய நவகாலனித்துவத்துக்குட்பட்ட நாட்டில் நிலமான்யத்தின் பாதிப்பு மேலும் நீண்டகாலம் தொடரவே செய்யும். சட்டங்களோ பிரகடனங்களோ நிலைமையை முற்றாகத் திருத்த முடியாது. பிரச்சனை பற்றிய விழிப்பை ஏற்படுத்துவது சாத்தியமானதும் வரவேற்கத் தக்கதும் ஆகும். ஆயினும் தீர்வை விரும்புவோர் பிரச்சனையை அதன் அடிப்படையிலேயே அணுக வேண்டும்.

பெண்ணுரிமையோ, சாதி முறையோ, சிறுபான்மை இனப் பிரச்சனையோ எதுவாயினும் அதன் வரலாற்றுக் காரணங்களும் வளர்ச்சியின் தன்மையும் எவ்வாறனவையாயினும் அவற்றின் விரிவான சமுதாய அடிப்படையினின்றும் அதன் அதி முக்கியமான முரண்பாட்டினின்றும் பிரித்துநோக்க முடியாதவை. சுரண்டல் சமுதாய அமைப்பு தொடர்கையில் அதன் விளைவான கொடுமைகட்குப் பகுதித் தீர்வுகள் இடையாது. முழுமையான தீர்வு மூலமே பிரச்சனையின் ஒவ்வொரு கூறும் தீர்க்கப்படமுடியும். இதன் அர்த்தம் அடிப்படையான சமுதாய மாற்றம் ஏற்படும் வரை மற்றப் பிரச்சனைகளை எல்லாம் அசட்டை செய்வது அல்ல. சாதிக் கொடுமைக்கு எதிரான எழுச்சியும் இனவாத அடக்குமுறைக்கு எதிரான போராட்டமும் பெண்ணுரிமைக்கான இயக்கமும் பொதுவாகவே அடிப்படையான சமுதாய மாற்றத்துக்கான போராட்டத்திற்கு உடன்பாடானவை ஆயினும் அவை தனிமைப்படுத்தப்படும் போதும் மூலப் பிரச்சனையை விட முக்கியமானவையாகக் காணப்படும் போதும் பாரிய தவறுகள் ஏற்படுகின்றன.

பாட்டாளிவர்க்கக் கண்ணோட்டத்திலான நவகாலனித்துவத்தினின்றும் விடுதலைக்கான தேசியப் போராட்டத்துடன் மேற்கூறிய ஒவ்வொரு பிரச்சனையும் இணைக்கப்படும்போது அது பரந்துபட்ட ஆதரவைப் பெறமுடியுமாகிறது. சாதி எதிர்ப்பில் ஒடுக்கப்பட்ட உயர் சாதியினர் பங்குபற்றவும், பெரும்பான்மை இனவாதஎதிர்ப்பின் பெரும்பான்மை இனத்தின் தொழிலாளிவர்க்கமும் தேசபக்த சக்திகளும் ஆதரவு தரவும், பெண்ணுரிமைக்காக முழு முற்போக்கு இயக்கமுமே போராடவும் முடியுமாகிறது. அல்லாத இடத்து அது வெறும் சாதிப் பூசலாகவோ, வெறும் இனவாதப் போராட்டமாகவோ, சாரமற்ற ஒரு நடுத்தரவர்க்கக் கூக்குரலாகவோ தணிந்துவிடுவதோடு தனக்குள்ளேயே புதிய பகை முரண்பாடுகளை ஏற்படுத்தித் தன்னையும் பலவீனப்படுத்திக் கொள்கிறது.

★

# றீகன்-ஜே.ஆர். சீனப்பயணம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

அமெரிக்க ஜனாதிபதி றீகனும், இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் அண்மையில் அடுத்தடுத்து சீனப் பயணங்களை மேற்கொண்டனர். உலகின் பல நாடுகளின் தலைவர்கள் சீனப் பயணத்தை மேற்கொண்டு வருவது போன்று வழமையான அரசுகளுக்கிடையிலான உறவை அடிப்படையாகக் கொண்ட பயணத்தையே றீகனும்—ஜே. ஆரும் மேற்கொண்டனர். ஆனால், சீன எதிர்ப்புநிலைகொண்ட பத்திரிகைகளும், சோவியத் சார்பு பிரசாரகர்களும் இப் பயணங்களை வித்தியாசமான ஒன்றாகக் காட்ட முற்பட்டனர். சீனாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை நன்கு உணர்ந்து தெரிந்து கொண்ட உலகமக்களை எவ்வித மான பொய்ப் பிரச்சாரங்களும் ஏமாற்றி விடமாட்டாது.

சீன தேசம் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்படும் மக்கள் ஜனநாயக (தொழிலாளி வர்க்க சர்வாதிகார) சர்வாதிகாரத் தன்மை கொண்ட ஒரு சோஷலிச அரசாகும். அவ்வாறாயின் அச் சோஷலிச அரசு உலகின் வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளின் அரசாங்கத்துடன் அரசுகளுக்கிடையிலான உறவுகளை வைத்திருக்கக் கூடாது என்பது அர்த்தம் அல்ல. லெனினால் தலைமைதாங்கப்பட்ட சோவியத் அரசு பின்பு ஸ்டாலினால் தலைமைதாங்கப்பட்ட அதே சோஷலிச அரசு அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளுடன் அரச உறவைக் கொண்டிருந்தது.

சீன அமெரிக்க உறவுகளில் உள்ள அம்சம் என்னவெனில் 1949ல் சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது முதல் அமெரிக்கா சீனாவை உலகில் இருந்து பிரிக்கஎடுத்த முயற்சிகள் அத்தனையும் தோல்வி அடைந்த நிலையில் சீனாவுடன் அரச தொடர்பை ஏற்படுத்த வேண்டிய நிலைக்கு வந்தது. எழுபதுகளின் ஆரம்பத்தில் இதற்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று அவை படிப்படியாக விரிவடைந்து எழுபதுகளின் பிற்பகுதியில் இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன. இவ் ராஜதந்திர உறவுக்குப்பின் முதன் முதலாக ஒரு அமெரிக்க ஜனாதிபதி சீனாவிற்கு பயணம் செய்தது இதுவே முதற் தடவையாகும். ஏற்கனவே நிக்ஜனும், போர்டும் சீனத்திற்கு சென்றிருந்தாலும் றீகனின் பயணமே முழுமையான ஒன்றாக இருந்தது.

சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை சுதந்திரமானதும் ஒவ்வொரு விஷயத்திலும் தெளிவானதுமாகும். அதைப் பல தடவைகளில் சீனத்தலைவர்கள் உலகுக்கு கூறிவந்துள்ளனர். சீனா எந்த வல்லரசு முகாமிலும் சேரப்போவதில்லை. அதே போல் எந்த வல்லரசும் சீனாவை தமது நோக்கத்திற்கு பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. எந்த வல்லரசுத்தலைவர்களிடமும் தனது கோட்பாட்டை விட்டுக் கொடுக்க ஒருபோதும் சீனம் இணங்கியதும் கிடையாது. உதாரணமாக அமெரிக்காவுடன் உறவுகளை வளர்க்க முற்படும் அதேவேளை தாய்வானை தாய் நாட்டுடன் இணைக்கும் தமது நிலைப்பாட்டை எச்சந்தர்ப்பத்திலும் சீனம் விட்டுக் கொடுக்கவில்லை. அதே போல் அமெரிக்கா மத்திய அமெரிக்கா நாடுகளில் பின்பற்றி வரும் கொள்கைகளையும், மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கு பக்கபலமாக இருந்து வரும் நிலையையும் சீனத் தலைவர்கள் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதே போல் அணு ஆயுத உற்பத்தியிலும் கட்டுப்படுத்தும் பிரச்சனையிலும் சீனா அமெரிக்காவை ஆதரிக்கவோ உற்சாகப்படுத்தவோ இல்லை சீனாவின் நிலைப்பாடு எப்பொழுதும் கோட்பாடு தழுவிய தொன்றேயாகும். கோட்பாடற்ற சமாதானமோ அன்றி உறவோ சீனாவின் நிலை அல்ல சீனத் தலைவர்கள் தாம் சொல்வதைத் தெளிவாகப் புரிந்துகொண்டே சொல்வதாகவும், அதேபோல் ஒவ்வொரு செயலையும் அறிந்தே செய்வதாகவுமே கூறுகிறார்கள் இது நடைமுறையில் காணக் கூடியதுமாகவே உள்ளது.

றீகனின் சீனப் பயணம் சோவியத் சார்பு உள்ளவர்களுக்கு எரிச்சலையும் அர்த்தமற்ற அச்சத்தையும் கொடுத்துள்ளது. அதே வேளை அமெரிக்க சார்பினர் சீனாவைத் தமது அணிக்குள் கொண்டு வந்துவிட்டது போல் விஷயம் விளங்காது வீண் கற்பனை செய்கின்றனர். ஆனால் சீனாவோ சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியுடன் சென்றுகொண்டிருக்கின்றது. மாஓவின் மூன்றுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் தமது வெளிநாட்டுக் கொள்கையை வழிநடத்தி வரும் சீனத் தலைமை அமெரிக்காவின் தற்போதைய நிலையை நன்கு புரிந்து கொண்டே செயல்பட்டு வருகிறது. அன்று சோவியத் யூனியனைத் தலைமை தாங்கி வழி நடத்திய தோழர் ஸ்டாலின் 1939ல் ஹிட்லருடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருந்தார். அவ்வேளை சோவியத் யூனியனையும்—ஸ்டாலினையும் எதிர்த்து அர்த்தமில்லாப் பிரசாரங்கள் செய்யப்பட்டன. அன்றைய சில முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் அவ் ஒப்பந்தம் பற்றி எழுதுகையில் ஸ்டாலின் ஹிட்லரை ஏமாற்றினாரா? அல்லது ஹிட்லர் ஸ்டாலினை ஏமாற்றினாரா? இதை உலகம் ஒருநாள் அறியும் எனக் கூறிவைத்தனர். ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் சோவியத் யூனியனோ அன்றி தோழர் ஸ்டாலினோ தோற்கடிக்கப்படவும் இல்லை. ஏமாற்றப்படவுமில்லை. பதிலுக்கு ஹிட்லரும் அவனது கூட்டாளிகளுமே ஏமாற்றப்பட்டு தோற்கடிக்கப்பட்டனர்.

எனவே சீனாவிற்கான பயணத்தை றீகனும், நாகசோனியும் வேறும் பலரும் மேற்கொள்ளலாம். ஒப்பந்தங்களும் செய்யப்படலாம். ஆனால் சீனாவின் கோட்பாடு தழுவிய சோஷலிசநிலைப்பாடு தளம்பமற்றதாகவே முன் செல்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி றீகனைத்தொடர்ந்து அவரது விசுவாசியான ஜே. ஆரும் சீனப்பயணத்தை மேற்கொண்டது சில விமர்சகர்களது அர்த்தமற்ற ஒப்பு நோக்கு ஒரு உதாரணமாகி விட்டது. ஜே. ஆர். சீனாவிற்கு தற்போது முதற் தடவை சென்றிருப்பதும் மற்றொரு குறிப்பான விஷயமாகும். ஆனால் இலங்கை ஒரு மூன்றாம் உலக நாடு என்ற வகையிலும், இலங்கை—சீன உறவுகள் ஏற்கனவே பலமுடையதாக இருந்து வருவதாலும், வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு இரு நாடுகளுக்குமிடையில் வளர்ந்து வருவதாலும் இலங்கை ஜனாதிபதியின சீனப்பயணம் புதுமையான தொன்றல்ல. எந்தவொரு நாட்டின் உள்விவகாரத்திலும் சீனா தலையிட்டது கிடையாது. இனிமேலும் தலையிடமாட்டாது என்பதை எல்லா நாட்டுத் தலைவர்களுக்கும் கூறுவதுபோலவே இலங்கை ஜனாதிபதிக்கும் சீனத்தலைவர்கள் கூறியிருக்கிறார்கள் அதுமட்டுமன்றி ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் வேறுநாடுகள் தலையிடுவதையும் சீனா கண்டித்தே வந்துள்ளது. ஒரு மூன்றாம் உலக நாட்டின் தலைவர் என்றவகையிலும் நீண்ட பொருளாதார கலாச்சார உறவுகளைக் கொண்டிருக்கும் நாடு என்ற வகையிலும் இலங்கை ஜனாதிபதியை வரவேற்று கௌரவித்ததில் சீனாவின் நிலை சரியானதொன்றேயாகும் அதற்காக யாராவது சீனாவை நொந்துகொண்டால் அது அவர்களின் போதாமையின வெளிப்பாடு மட்டுமேயாகும்.

இன்று பல்வேறு அமைப்புகளைக் கொண்ட மூன்றாம் உலக நாடுகள் மத்தியில் பலமான ஐக்கியம் வேண்டும் என்பதையே சீனா வலியுறுத்தி வருகிறது. உலக மேலாதிக்கத்தை எதிர்ப்பதும், உலக சமாதானத்தைப் பேணுவதும் கடமை எனக் கூறிவரும் சீனம் மூன்றாம் உலக நாடுகள் தமது தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்த்து, தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்க தமது சொந்தக் கால்களில் தங்கிநிற்பதும், பரஸ்பரம் ஒத்துழைத்து முன்னேறுவதும் அவசியம் என்பதையே வலியுறுத்தி வருகிறது. இந்த நிலைப்பாட்டிற்கு அமையவே மூன்றாம் உலக நாடுகளுடனான ஒத்துழைப்பையும், நல்லுறவையும் வளர்த்து வருகின்றது. அந்த வகையிலேயே இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணம் முக்கியத்துவம் பெற்றது எனலாம். அதைவிடுத்து உள்நாட்டு விவகாரங்களில் மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சி பீடத்தினர் நடந்துகொள்வதை சீனா ஒரு பொது அளவு கோலாகக் கொள்வதில்லை. அப்படிக் கொள்ளவும் முடியாது. உள்நாட்டு விவகாரங்களை அந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டுமே அன்றி பெரிய நாடு, வல்லமை கொண்ட நாடு என்ற விதமாக ஏனைய நாடுகளை நடத்துவதை சீனா எப்பொழுதுமே எதிர்த்து வந்துள்ளது.

ஆதலால் றீகன், ஜே. ஆர். சீனப் பயணங்கள் அவரவர் நிலைக்கேற்ப சீனாவின் சுதந்திர வெளிநாட்டு கொள்கையின் வழிநடத்தலுக்கு உட்பட்டதொன்றே அன்றி வித்தியாசமான தொன்றல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

★

## பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவருக்கு சீனாவில் பெரும் வரவேற்பு

அமெரிக்க ஜனாதிபதி சீன விஜயத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய ஓரிரு நாட்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத சீனாவிற்கு சென்றார். சீனத் தலைநகர் பீஜிங்கில் ஒரு நாட்டின் தலைவருக்கு அளிக்கப்படும் வரவேற்பு போன்று யசீர் அரபாத் வரவேற்கப்பட்டார்.

மூன்று நாட்கள் அவர் சீனாவில் தங்கியிருந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும், அரசாங்கத்தினதும் தலைவர்களுடன் நட்புறவு மிகுந்த பேச்சுவார்த்தைகளை நடத்தினார். சீன ஜனாதிபதி லீ சீநியான், டெங் சியா ஓபிங், பிரதமர் சா ஓ சியாங் ஆகியோருடன் யசீர் அரபாத் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினார். பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தற்போதைய நிலை, தமது எதிர்காலத் திட்டம், அதில் சீனம் அளித்துவரும் தன்நலம் அற்ற உதவி போன்றவற்றை அரபாத் விளக்கியிருந்தார்.

சீனத் தலைவர்கள் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமது மனப்பூர்வமான ஆதரவை தொடர்ந்தும் தருவதாக உறுதியளித்தனர். இழந்த தாயகத்தை மீண்டும் பெறும் போராட்டத்தில் பலஸ்தீன மக்களின் ஸ்தாபனமாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையே அங்கீகரிக்கப்பட்ட ஒரே இயக்கமாகச் சீனா ஏற்றுக் கொள்கின்றது என்றும் யசீர் அரபாத்தின் தலைமையை தாங்கள் அங்கீகரிப்பதாகவும் சீனத்தலைவர்கள் கூறினார்கள்.

மேலும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர நாடுகளின் தலைமையில் பாலஸ்தீன நாட்டை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தை பற்றிய யசீர் அரபாத்தின் யோசனைக்கு சீனத் தலைவர்கள் தமது ஆதரவையும் தெரிவித்தனர்.

யசீர் அரபாத் தனது உரையில் சீனா பாலஸ்தீன மக்களினதும், அவர்களது போராட்டத்தினதும் உற்ற நண்பன் என்றும், சீனாவின் கடந்தகால, நிகழ்கால உதவிகளையும் ஒத்துழைப்பையும் பலஸ்தீன மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டு நன்றி கூறிக்கொண்டார்.

யசீர் அரபாத் சீனவிஜயத்தை முடித்துக்கொண்டு வடகொரியாவிற்கும் சென்றார். அங்கு ஏற்கனவே விஜயம் செய்திருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலா தோழர் குயா ஓபாங் அவர்களையும் சந்தித்து உரையாடினார்.

யசீர் அரபாத்தின் அண்மைய சீன விஜயம் பலஸ்தீன மக்களுக்கும் சீன மக்களுக்கும் உள்ள போராட்ட உணர்வு மிக்க உறவை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

★

## நதிக்கரை மூங்கில்.........

6ம் பக்கத் தொடர்......

அவரிடம் இருக்கும் சிறப்பியல்புகள் பல. நியாயமான விமர்சனத்தை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் தன்மையும், விமர்சிக்க வேண்டியவற்றை முதுகு சொறியும் விதத்தில் அன்றி நேர்மையாகவே விமர்சிக்கும் தன்மையும் அவரிடம் நிறைந்து காணப்படுகின்றன. இதைச் செய்யும் போது அவர் தனி மனிதப் பிரச்சனையாகவோ அன்றி போலித்தனம் மிக்க கௌரவப் பிரச்சனையாகவோ கருதுவதில்லை. இத்தகைய தன்மை எல்லா இலக்கியகாரர்களுக்கும் எளிதில் ஏற்படுவதில்லை. சமுதாயத்தையும் மக்களையும், அடிப்படைமாற்றத்தையும் மனதார வேண்டி அதற்குத் தங்களாலான பங்களிப்பை வழங்க முன்வரும் குறிப்பிடத்தக்க இலக்கியக்காரர்களுக்கு மட்டுமே இச் சிறப்பியல்புகள் அமைவதுண்டு. அந்த வரிசையில் பேராசிரியர் சிவசேகரம் ஒருவராவர். அவர் கவிதைத் துறையில் மட்டுமன்றி, சிந்தனைத் தெளிவு மிக்க கட்டுரையாளரும் ஆவர். போலியானவற்றையும், ஏமாற்றுத் தனமானவற்றையும் விமர்சிக்கும் பாணி ஏனைய விமர்சகர்களிடம் இருந்து வேறுபட்டது. அவரது சில இலக்கிய விமர்சனங்கள் பல போலி வேஷதாரிகளை தோலுரித்து நிலைகுலையச் செய்தவை என்பது நினைவு கூரதத்தக்கதாகும்.

ஓரிரு வாரப் பத்திரிகை ஆசிரியர்களையும், அதே பத்திரிகைகளின் பதி எழுத்தாளர்களான சில 'அன்பர்'களையும் கொண்டு பிரபல்யம் தேடும் 'பிரபல' எழுத்தாளர் சிலருக்கு சிவசேகரம் என்றால் சிம்மசொப்பனமாகவே இருக்கும். காரணம் சிவசேகரத்தின் இலக்கிய நிலைப்பாடு தான் வரித்துக்கொண்ட மாக்சிச தத்துவார்த்த நடைமுறையின் தேவைகளில் இருந்து விஷயங்களை அணுகுவதாக உள்ளது தான். அதேவேளை மாக்சிசப் போர்வையில் விளம்பரமும், வியாபாரமும், சுய கௌரவமும் தேடும் இலக்கியக் காரர்களுக்கு அத்தகைய தத்துவார்த்த நடைமுறை ரீதியிலான விமர்சன அணுகு முறை கசப்பான தொன்றாகவே இருக்கும்.

நண்பர் சிவசேகரத்தின் கவிதைகள் தொகுதியாக வெளிவந்தது மகிழ்ச்சிக்குரிய தொன்றே. ஆயினும் இந்திய வெளியீடாக வந்ததன் மூலம் அதன் விலையும், விற்பனை மட்டுப்படுத்தலும் அக்கவிதைகள் சென்றடைய வேண்டிய மக்களின் மத்திக்கு சென்றடைவதைச் சிரமமாக்கியுள்ளது. அவரது ஆற்றல் மிக்க கவிதைகள் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவை இலங்கையிலேயே நூல் உருவம் பெறுவதும், பரந்து மக்களிடையே சென்றடைவதும் முக்கியமானதாகும்.

★

# தமிழ்த்தலைவர்கள் தலைகாட்ட ஆரம்பித்துள்ளனர்

# காலம் கடந்தாவது கண்விழிப்பு ஏற்பட்டதே!

கடந்த யூலை இனவாத வன்செயல்களுக்குப் பின்பு பெட்டி, படுக்கை, பெண்டிர், பிள்ளைகள் யாவற்றுடனும் இந்தியாவில் ஜாகை கொண்ட தமிழ்த் தலைவர்கள் தற்போது இலங்கையில் உலாவத் தொடங்கிஉள்ளனர். இலங்கையில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறித் தமிழ் நாட்டில் வீடுகள், விடுதிகள், வாகனவசதிகள், பிள்ளைகளின் கல்விக்கு பல்கலைக்கழக அனுமதிகள், இன்னும் பிற பல பெற்று சௌகரியமாக இருந்தனர். அங்கிருந்தே மலேசியாவிற்கும், லண்டனுக்கும் வேறும்பல நாடுகளுக்கும் பறந்து திரிந்தனர். எல்லாம் இலங்கைத்தமிழனின் பெயரால்தான், உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது கிடைத்திருந்தால் அதைப்பற்றி யார்தான்குறை கூறமுடியும். மண்டபம் முகாமிலும் ஏனைய முகாம்களிலும் இலங்கையில் இருந்து சென்ற அப்பாவித்தமிழர்படும் அவல நிலைமைகளை இந்தியப்பத்திரிகைகள் சிலவற்றில் காண நோக்கமுடிந்தது. பொழுதும் அடிபடுவதோ அப்பாவித் தமிழர், ஆதாயம் பெறுவதோ உயர்வர்க்கத் தலைவர்கள். இதுவே அன்றும் இன்றும் நடைபெறும் பாராளுமன்ற அரசியல் பம்மாத்து.

இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் இந்தியாவில்தங்கி இருப்பதையிட்டு இந்தியாவிலேயே அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழ் நாட்டு முதல்வர் எம். ஜி. ஆர் நேரடியாகவே இத்தலைவர்களுக்கு இலங்கை செல்லும்படி எடுத்துக் கூறி இருந்தார். கருணாநிதி கூட தமிழ்த்தலைவர்கள் இலங்கை சென்று இயக்கம் நடத்த வேண்டும் என்று பகிரங்கமாகப் பேசினார். பத்திரிகைகள் பல கிண்டலாக இதுபற்றி எழுதின. அண்மையில் 'இன்டியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கிலத்தினசரி தனது ஆசிரியத்தலையங்கத்தில் அமிர்தலிங்கம் இந்தியாவில் தங்கி இருப்பது அவருக்கும் அவரது கட்சிக்கும் இழுக்கை ஏற்படுத்தும் செயல் என்று கூறியது. உன் இலங்கைப் பிரதமருக்கு அமிர்தலிங்கம் கொடுத்த பதிலை இந்தியாவில் இருந்து விடுப்பதை விட்டு இலங்கையில் இருந்து விடுவதே சரியானது எனச் சுட்டிக்காட்டியது. அதாவது இலங்கைப் பிரச்சனைக்கு இலங்கையில் இருந்தே இயக்கம் நடத்த வேண்டும் இந்தியாவில் அல்ல என்பதையே அப்பத்திரிகை சுட்டிக்காட்டியது.

இத்தனை நேரடி நெருக்குதல்களுக்குப் பிறபே நகர மனமின்றி இலங்கைக்கு நகர்ந்துள்ளார்கள் நமது தன்மானத் தமிழ்த்தலைவர்கள் ஒரு வருடம் முடியப்போகும் இவ் வேளையிலாவது இங்கு வந்தார்களே இத்தலைவர்கள் என்பதில் அவர்களது மிக நெருங்கிய ஆதரவாளர்களுக்கு ஒரு வித நிம்மதி. ஆனால் எப்பொழுது எந்த நேரம் இத்தலைவர்கள் இந்தியாவிற்கு பயணம் கட்டுவார்கள் என்பது சொல்லமுடியாத ஒன்றாகும்.

கடந்த ஒருவருடமாகத் தமிழ் மக்கள் தங்களை மறந்து விட்டார்களே என்ற ஒருவித அச்சத்தில் பழயதைக் கெகுப்பிக்கும் பணியில் சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம், சாத்வீக இயக்கம் பற்றி இடையிடையே அறிக்கைகளும் விட்டு வருகிறார்கள். மக்களின் சார்பாக யாரும் எத்தகைய இயக்கத்தை நடத்துவதையும் யாரும் ஆட்சேபிக்கமுடியாது. ஆனால்மக்கள் வினவுவது என்னவெனில் ஒரு

வார்களா? அல்லது இங்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறி மனைவி மக்களுடன் சேர்ந்து கொள்ளத் தமிழ்நாட்டிற்கோ மலேசியாவிற்கோ அன்றி லண்டனுக்கோ சென்று விடுவார்களா? என்பதேயாகும்.

தமிழ்மக்களின் இன்றைய அவல நிலைக்கு இலங்கையின் சிங்களப் பேரினவாதிகளைக் கொண்ட ஆளும்வர்க்கத்தினர் மட்டும் காரணம் அல்லர். இவர்களோடு வர்க்க உறவு பூண்டு தமது சொத்து சுகங்களைப் பெருக்கிக் கொண்ட பச்சோந்தித் தமிழ்த் தலைவர்களும் காரணமானவர்கள் என்பதைத் தமிழ் மக்கள் இவ்வேளையில் புரிந்து கொள்வது ஒரு தேவையாகும்.

மேலும் தமிழ்த் தலைவர்களின் கடந்த காலத் தவறுகளில் ஒன்றை இவ்வேளை சுட்டிக் காட்டாது விட்டால் நாம்குற்றவாளிகள். ஏனெனில் தமிழ்

வங்கள், கூட்டங்கள் கவரொட்டி இயக்கங்கள் நடத்திய போது இதே தமிழ்த் தலைவர்கள் அமைதியாக இருந்து இஸ்ரேலுக்கு இதய பூர்வமான ஆதரவைத் தெரிவித்தார்கள். இரத்தக்கறை படிந்த கைகளால் இஸ்ரேலியர்கள் தமது தூதரகத்தில் கொடுத்தவிருந்துகளை உண்டு மகிழ்ந்தனர். இஸ்ரேலைப் புகழ்ந்து உதாரணம் காட்டினர். இஸ்ரேலுக்கு நட்புறவுப் பயணங்கள் மேற்கொண்டனர். அமெரிக்கா—இஸ்ரேல் கூட்டுறவை வாயார வாழ்த்தினார்கள்.

1970ம் ஆண்டில் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை முறித்து ஸ்தானிகர் காரியாலயத்தை அகற்றினர். அப்போது அவமானத்துடன் வெளியேற்றப்பட்ட இஸ்ரேலியர்களுக்கு ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்

தமது மேதினக் கூற்றுக்கு உதாரணம் காட்டினார். அதாவது யூதர்கள் போல் தமிழர்கள் செயல்படுவதையே தமிழ்த்தலைவர்கள் மனதார விரும்பிலர். இது அவர்களது ஆண்ட பரம்பரைத் தத்துவத்தில் இருந்து பிறந்த ஆளும் வர்க்க நிலைப்பாடாகும்.

இவ்வாறெல்லாம் இஸ்ரேலைப் புகழ்ந்து வியந்து அதற்கு வக்காலத்து வாங்கியவர்கள் இன்று அதே இஸ்ரேலியர்கள் இங்கு வரவழைக்கப்பட்டதையிட்டு கண்டனம் தெரிவிக்கிறார்கள். பரவாயில்லை இப்பொழுதாவது இவர்களுக்கு கண்விழித்துக் கொள்ள முடிந்ததே அதுவே போதும். இதேபோல் எல்லா விடயங்களிலும் கண்விழித்துக் கொண்டால் தமிழ் மக்களுக்கும் நாட்டிற்கும் நல்லதாகும்.

## எமது நாட்டுப் பிரச்சினைகளுக்கு எமது நாட்டிலிருந்தே இயக்கம் நடத்தவேண்டும்

மக்கள் இவ் விடயத்தை சற்று அவதானிப்பது இன்றுமட்டுமல்ல எதிர்காலத்திற்கும் நல்லதாகும். அதாவது 1967ம் ஆண்டளவில் இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினை உலகம் பூராவும் மக்களால் அதிகம் பேசப்பட்டதொன்றாகும். சியோனிச இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு கொலைவெறி தாண்டவமாடி அதனால் உலகமே இஸ்ரேலின் முகத்தில் காறி உமிழ்ந்து கொண்டிருந்த சந்தர்ப்பம். கம்யூனிஸ்டுக்களாகிய நாம் ''இஸ்ரேல் அமெரிக்கக் கூட்டு பலஸ்தீன அரபு மக்களுக்கு வேட்டு'' 'இன்று பலஸ்தீன அரபு மக்களுக்கு நாளை இலங்கை மக்களுக்கு "இஸ்ரேலி

துக் கொண்ட இலங்கையின் பிற்போக்குவாதிகளிடையே தமிழ்த்தலைவர்களும் ஆர்வத்துடன் இருக்கக் காணப்பட்டனர். திரு. வி. என் நவரத்தினம் திரு. எஸ். சிவசிதம்பரம் போன்றவர்கள் தூதரகம் மூடப்பட்டதற்கு தமது பகிரங்க கண்டனங்களைத் தெரிவித்துக்கொண்டனர். அண்மைக்காலம்வரை இஸ்ரேல் தான் தமிழ்த் தலைவர்களின் தமிழ் ஈழத்திற்கான கனவுலக நாடாகக் காட்சி கொடுத்து வந்தது, அடுத்த மேதினம் தமிழ் ஈழத்தில் தான் நடைபெறும் என்று ஒவ்வொரு மேதினத்திலும் கூட்டணித் தலைவர்கள் கூறிவருவதை

கம்யூனிஸ்ட்டுக்கள் தங்களையிட்டு நம்பிக்கையும் உறுதியும் கொள்வதற்கு தகுந்த காரணம் உண்டு. ஏனெனில் அவர்கள் ஒருபோதும் குறுகிய சுயநலவாதிகளாகவோ, அன்றி தமது சொந்த வாழ்வுக்கு மக்கள் விரோத நிலைப்பாட்டை வகிப்பவர்களோ அல்லர். அவர்கள் எப்பொழுதும் நீண்டகால நோக்கில் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வையும் வலியுறுத்தி சொந்தநாட்டினதும், உலகத்தினதும் மக்களின் பக்கத்தில் நிற்பவர்கள். அதனாலேயே அவர்களது கொள்கைகள், வழிமுறைகள் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை.

இயக்கம் நடத்த வேண்டும் என்று பகிரங்கமாகப் பேசினார். பத்திரிகைகள் பல

[illegible]யும் யாரும் ஆட்சேபிக்கமுடியாது. ஆனால்மக்கள் வினவுவது என்னவெனில் ஒரு நெருக்கடியான கட்டத்தில் இதே கனவான்கள் தமிழ் மக்களோடு நின்று இன்ப துன்பங்களை ஏற்றுக்கொள்

வேட்டு'' 'இன்று பலஸ்தீன அரபு மக்களுக்கு நாளை இலங்கை மக்களுக்கு "இஸ்ரேலியப் பயங்கரவாதிகளே பலஸ்தீன— அரபு மக்களைப் படுகொலை செய்யாதே'' என்று சுலோகங்களை எழுப்பி ஊர்வ

பெறும் என்று ஒவ்வொரு மேதினத்திலும் கூட்டணித் தலைவர்கள் கூறிவருவதை ஏனைய கட்சியினர் கிண்டல் செய்தனர். அப்போது திரு. அமிர்தலிங்கம் அதற்கு கொடுத்த விளக்கம் என்ன; இஸ்ரேல் உருவாகுவதற்கு முன்பு ஒவ்வொரு யூதனும் (சியோனிசவாதிகளான வெறிகொண்ட யூதர்கள்) மற்றொரு யூதனைக் காணும்போது அடுத்த சந்திப்பு இஸ்ரேலில் தான் என்று கூறியதையே

[illegible] அவர்களது கொள்கைகள், வழிமுறைகள் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை.

கம்யூனிஸ்டுக்கள், இடதுசாரியினர், முற்போக்கு வாதிகள் என்போருக்கு சேற்றை அள்ளி வீசுவதில் வல்லவர்களான தமிழ்த்தலைவர்கள் இப்போதாவது உண்மைகளைப் புரிந்தால் ஓரளவும் ஒத்தானும் போதுமானதாகும்.

★

# ஆலாலின் துக்கம் முடிந்ததா?

கடந்த மேதினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தடைவிதிக்கு முன்பே ''தமிழ்மக்கள் துன்பத்துடனும் துக்கத்துடனும் இருக்கும் இவ்வேளை மேதினத்தையும் துக்கதினமாகக் கொள்வதே சரியானது'' எனக் கூறிக் கூட்டணியின் சார்பில் அறிக்கை விட்டு அரசின் தடை நடவடிக்கைக்கு வழிகாட்டியவர் திரு. மு. ஆலாலசுந்தரம். இவர் எப்பொழுதும் தொழிலாளி வர்க்க விரோத முன்வரிசையில் நிற்பவர் என்பது பகிரங்க ரகசியம். போராட்ட தினத்தை விழாவென விளக்கி அதில் துக்கம் அனுஷ்டித்த இந்த ஆலால், அதற்குப்பிறகு இடம் பெற்ற மணிவிழா திறப்பு விழா, பாராட்டுவிழா போன்ற அத்தனை விழாக்களிலும், மேடைகளின் முன்வரிசையில் கோலாகலமாக வீற்றிருந்து வருகிறார். அவருக்கு துக்கம் முடிந்ததா? துயரம் நீங்கியதா? அல்லது தொழிலாளர் இனத்தில் மட்டும் தான் துக்கமும் துயரமும் நினைவுக்கு வருமா?

1-ம் பக்கத் தொடர்...

செய்யப்பட்டுள்ளன. அந்த வரிசையில் தற்போது ஜனாதிபதியின் சம்பள உயர்வுத் தீர்மானம் வந்துள்ளது.

ஜனாதிபதி தற்போது ஐயாயிரம் ரூபாவே சம்பளமாகப் பெறுகிறார். ஆனால் நாட்டின் தலைவர் என்ற ரீதியின் பேரதிபனவு சலுகைகளும், விஷேச உரிமைகளும் இருக்கின்றன. வாகன வசதி, வீட்டு வசதி, பணியாட்கள் வசதி என்பன தாராளமாக உண்டு இவை இருந்தும் அவருக்கு ரூபா பத்தாயிரம் சம்பள உயர்வு கொடுக்க மந்திரி சபை முடிவு செய்துள்ளது. அது பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்படும். அது மட்டுமல்ல. தொகையான ஓய்வூதியமும் கிடைக்க வழி செய்யப்படுமாம்.

நாட்டின் பெரும் பகுதியினருக்கு சம்பள உயர்வு மறுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட உயர் வகுப்பினருக்கு தாராளமாக சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. இதுதான் இன்றைய ஆட்சியின் தார்மீகம், ஜனநாயகம். இதைவிட இதற்கு இலக்கணம் வேறும் வேண்டுமா?

1-ம் பக்கத் தொடர்......

# இஸ்ரேலிய......

வாதிகளான இஸ்ரேலியர்களை இங்கு வரவழைத்ததன் மூலம் மற்றொரு அபகீர்த்தியை இந்த அரசு நாட்டிற்குத் தேடித் தந்துள்ளது. இதைச் சுய கௌரவமிக்க இலங்கை மக்கள் எவரும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

அமெரிக்காவின் அரவணைப்புடன் இஸ்ரேலியர்களை அனுமதித்ததன்மூலம் நமது நாட்டை வல்லரசு ஆகாமுடன் இணைக்கும் செயலையே அரசு மேற்கொண்டுள்ளது. இது எதிர்காலத்தில் பயங்கர விளைவுகளையே உருவாக்கி விடப்போகிறது. அத்துடன் இது அணிசேராக் கொள்கையை காலில்போட்டு மிதித்ததற்கு ஒப்பானதாகும். அரசின் இப்போக்கை இலங்கை கம்யூனிட் கட்சி (இடது) மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் இதற்கு எதிரான இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் எமதுகட்சி வேண்டுகின்றது.

3ம்-பக்கத் தொடர்...

# இந்த அரசாங்கத்தை

அரசு பாரதூரமாக எடுக்குமானால் அவ் ஆபத்துகளுக்குக் காரணமான இனப்பிரச்சினையின் தீர்வை முடிந்தளவிற்கு துரிதப்படுத்திவிருக்கமுடியும். ஆனால் அரசு என்ன செய்கிறது. இனப்பிரச்சினையைத் தீர்க்காது அதைச் சாட்டாக வைத்து, முழுநாட்டு மக்களின் கவனத்தையும் திசை திருப்பி தமது ஆட்சிக்காலத்தை நடத்திச்செல்ல முயல்கின்றனர். எத்தகைய திசை திருப்பலைச் செய்தாலும் நாட்டு மக்களை அதிககாலம் ஏமாற்ற முடியாது. நிச்சயம் அடுத்த கட்டத்தில் மக்கள் இந்த அரசிற்கு எதிராகப் போராடுவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

அடுத்து தோழர் சோ. தேவராஜா உரையாற்றும் போது இந்நாட்டின் தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று அரசதரப்பிலிருந்து கூறப்படுகிறது. தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து என்றால் அது எங்கிருந்து வந்தாலும் எதிர்க்கப்பட வேண்டியதாகும். இந்தியாவிடம் இருந்து வரும் அச்சுறுத்தலை எதிர்க்கும் அதேவேளை அமெரிக்காவடல் வரும் ஆபத்தைக் கட்டி அணைக்க முடியாது. இனப்பிரச்சினையைச் சாட்டாகவைத்து மேலாதிக்க வல்லரசுகளும் அவற்றின் கூட்டாளிகளும் நாட்டுக்குள் எந்த ரூபத்தில் வந்தாலும் அவர்களை அனுமதிக்க முடியாது. இனப்பிரச்சினையை இவ்வளவிற்கு மோசமாக்கி நாட்டின் சுதந்திரம் இறமைக்கு ஆபத்தை உருவாக்கிய குற்றவாளிகள் யூ. என். பி ஆட்சியினரைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது என்றும் கூறினார்.

மேலும் இக் கூட்டத்தில் தோழர்கள் வை. வன்னியசிங்கம், கா. பஞ்சலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் 15/1 மின்சார நிலைய வீதியிலுள்ள சி. நவரத்தினம் அவர்களால் யாழ்ப்பாணம் 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.